விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 02 புதன்கிழமை (18.08.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 242




## இளம் குடும்பஸ்தர் குத்திப் படுகொலை

### வல்வெட்டித்துறையில் சம்பவம்



(கரணவாய்)
கத்திக்குத்துக்குள்ளான இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 19

## 171 பேர் உயிரிழப்பு 3,609 பேருக்கு தொற்று

(கொழும்பு)
கொரோனாத் தொற்றால் நாட்டில் மேலும் 171 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.
இதன்மூலம் நாட்டில் கோவிட் -19 நோயினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 6 ஆயிரத்து 434ஆக 19

## நாடு முழுவதும் ஒரு மாத கால பொது முடக்கம்?

(கொழும்பு)
நாட்டில் டெல்டா வகை திரிபு வைரஸ் பரவலின் தாக்கம் மிக மோசமாக அதிகரித்துள்ள நிலையில் தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்காக 19

## கிளிநொச்சி சந்தை மூடப்பட்டது

(முறிகண்டி)
கிளிநொச்சியில் கொரோனாப் பரவல் தீவிரம் பெற்றுள்ள நிலையில் கிளிநொச்சி சேவைச் சந்தையை தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானிக் 19

பருத்தித்துறையில்
## முதியவர் ஒருவர் சடலமாக மீட்பு

(பருத்தித்துறை)
யாழ்.பருத்தித்துறை - வியாபாரிமூலை பகுதியில் முதியவர் ஒருவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருக்கின்றார்.
அப்பகுதியில் இயங்கிவரும் ஐஸ் தொழிற்சாலைக்கு அண்மையாக குறித்த 19

### அபாயக் கட்டத்தில் இலங்கை

# இரு வாரங்களுக்கு நாட்டை முடக்குங்கள்



### சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

*(கொழும்பு)*
*நாட்டில் தீவிரமாக பரவி வரும் கொரோனா வைரஸால் அபாயக் கட்டத்தில் இலங்கை தற்போது உள்ளது. வைரஸ் தொற்றில் இருந்து நாட்டு மக்களைக் காப்பாற்ற இரண்டு வாரங்களுக்காவது நாட்டை முடக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.* *(19ஆம் பக்கம் பார்க்க)*

## நாட்டை முடக்குவது தொடர்பில் அரசு நடுநிலையை பின்பற்ற முடிவு

### புதிய சுகாதார அமைச்சர் கெஹலிய

(கொழும்பு)
கோவிட்-19 தொற்று நோயைக் கட்டுப்படுத்த நாட்டை முடக்குவதற்கு பல்வேறு கோரிக்கைகள் இருந்தபோதிலும், அரசு இந்த விடயத்தில் நடுநிலைக் கொள்கையை பின்பற்ற முடிவு செய்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய 19

## கொரோனாத் தொற்றால் வடக்கில் 7 பேர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
கொரோனா வைரஸ் தொற்றால் வடக்கில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த புத்தூர் கிழக்கைச் சேர்ந்த 62 வயதுடைய ஆண் ஒருவரும் கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த 57 வயதுடைய ஆண் ஒருவரும்கொரோனாவால் உயிரி 19

## வவுனியாவில் மேலும் 101 பேருக்கு கோவிட்

(வவுனியா)
வவுனியாவில் மேலும் 101 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாகச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் 19

யாழ்.குடாநாட்டில்
## 69 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத் 19

கோவிட்டை கட்டுப்படுத்துவது தொடர்பில்
## ஜனாதிபதி கோட்டாவுடன் ரணில் கலந்துரையாடல்

(கொழும்பு)
கோவிட் தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் முன்னாள் பிரதமரும் தற்போதைய பாராளுமன்ற 19

### தற்போதைய அலையை கட்டுப்படுத்த முடியாது
7ஆம் பக்கம் பார்க்க

### டெல்டா வைரஸின் 3 பிறழ்வுகள் இலங்கையில் கண்டறிவு
5ஆம் பக்கம் பார்க்க

### சிவப்பு வலயத்தினுள் இலங்கை; முடக்கம் அவசியம்
3ஆம் பக்கம் பார்க்க

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு கொரோனா
6ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில் மயங்கி விழுந்தவர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா ஓமந்தை பகுதியில் பெக்கோ இயந்திரத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் திடீர் என மயங்கிவிழுந்த நிலையில் மரணமடைந்துள்ளார்.

குறித்த நபர் நேற்று காலை ஓமந்தை பாலமோட்டை பகுதியில் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது திடீர் என மயங்கி விழுந்துள்ளார். எனினும் அங்கிருந்தவர்களால் உடனடியாக மீட்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் மணரமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-03,250,299)

# பேரழிவு ஏற்படுவதற்கு முன்னர் நாட்டை முழுமையாக முடக்குங்கள்

## மருத்துவ நிபுணர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாவின் பரவல் பேரழிவு நிலையை அண்மித்துவிட்டது. செயலற்று இருப்பதைவிட தாமதமாகவேனும் செயற்படுவது நன்று. எனவே, பேரழிவு நிலைக்குச் செல்லும் முன்னர் உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிபுணர் குழுவால் பரிந்துரை செய்யப்பட்டவாறு மீண்டும் ஒரு முறை நடமாட்டக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் என ஜனாதிபதியிடமும் அரசிடமும் கேட்டுக் கொள்கின்றோம்." - இவ்வாறு மருத்துவ நிபுணர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதிக்கும் அரசுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் எழுதியுள்ள ஒரு திறந்த மடலிலேயே மருத்துவ நிபுணர்களின் சங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-"மருத்துவ நிபுணர்கள் சங்கத்தினராகிய நாங்கள் கொரோனா வைரஸின் டெல்டா திரிபானது வேகமாகப் பரவுவதால் ஏற்படக்கூடிய அழிவு பற்றி உலக சுகாதார ஸ்தாபனம், இலங்கை மருத்துவ சங்கம், சுகாதாரப் பரிசோதகர்கள் அத்துடன் மற்றைய அனைத்து சுகாதார சேவை பணியாளர்கள் எல்லோரும் கொண்டுள்ள கருத்தையே கொண்டிருக்கின்றோம்.

ஜனாதிபதியும் அரசும் நோய் பரவலைத் தடுப்பதற்காக விதித்துள்ள பயணத் தடைகள் மற்றும் கட்டுப்பாடுகளை வரவேற்கும் அதேநேரம், டெல்டா திரிபு வைரஸினுடைய பரம்பல் நிறுத்தப்பட முடியாத பேரழிவு நிலைக்குச் செல்லும் முன்னர், உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிபுணர் குழுவால் பரிந்துரை செய்யப்பட்டவாறு மீண்டும் ஒரு முறை நடமாட்டக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)

# நாட்டில் அந்நிய செலாவணி நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளது

## எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில

(கொழும்பு)

நாட்டில் அந்நிய செலாவணி நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளது என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

டுவிட்டர் பதிவொன்றின் மூலம் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். நாட்டில் அந்நிய செலாவணி கையிருப்பு பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

முதல் அரையாண்டு காலப் பகுதியில் நாட்டின் மொத்த இறக்குமதியில் 18 வீதம் எரிபொருட்களை இறக்குமதி செய்வதற்கு செலவிடப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் அரையாண்டு காலப் பகுதியில் இந்த தொகை 25 வீதமாக உயர்வடையக் கூடிய அபாயம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

எனவே நாட்டு மக்கள் எரிபொருட்களை சிக்கனமாக பயன்படுத்த வேண்டுமென அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

மக்கள் எரிபொருட்களை சிக்கனமாக பயன்படுத்தினால் அந்நிய செலாவணியைக் கொண்டு அத்தியாவசிய பொருட்களான மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளை கொள்வனவு செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-03)


## கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு அலுவலகம் வடக்கு மாகாண சபை

**இல. 18/9, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

**கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு அலுவலகத்திற்கான கட்டடத்தை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கான பெறுகை**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு அலுவலகத்திற்கு பின்வரும் வசதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் வாடகைக்கு கட்டடத்தினை வழங்க ஆர்வமுள்ள பெறுகைதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் செயலாளரினால் கோரப்படுகின்றன.

1. அலுவலகம் 3000 - 4000 சதுர அடிகளை கொண்டதாகவும் குறைந்தது 07 (ஏழு) அறைகள் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.
2. மலசல கூடங்கள் இரண்டு இணைக்கப்பட்ட (Attached Wash Room-02) மற்றும் பொதுவான மலசல கூடங்கள் இரண்டு (Common Wash Room-02) கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.
3. யாழ். நகரிலிருந்து குறைந்தது 03 KM தூரத்திற்குள் அல்லது மாநகர சபை எல்லைக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
4. உத்தியோகத்தர்கள் ஒன்றுகூடுவதற்கான மாநாட்டு மண்டபம் 450 சதுர அடிகள் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
5. வாகன தரிப்பிட வசதி இருத்தல் வேண்டும் (03 மோட்டார் கார் மற்றும் 30 மோட்டார் சைக்கிள்).
6. மூன்று கட்ட மின்சார வசதி (Three Phase) இருத்தல் வேண்டும்.
7. குடிநீர் மற்றும் குழாய் நீர் வசதி இருத்தல் வேண்டும்.
8. பொதுமக்களுக்கு இலகுவான பிரவேச வழி இருத்தல் வேண்டும்.
9. வாடகை ஒப்பந்த காலம் ஆகக்குறைந்தது 02 வருடங்கள்.
10. வாடகை முற்பணம் வழங்கப்படமாட்டாது.
11. விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை வழங்கப்படும்.

ஆர்வமுள்ள பெறுகைத்தாரர் மீளச் செலுத்தமுடியாத பெறுகைக் கட்டணம் ரூபா 500.00 ஐ செலுத்தி அலுவலக நேரத்தில் **16.08.2021** ஆம் திகதி தொடக்கம் **30.08.2021** ஆம் திகதி வரை காலை 9.00 மணி முதல் மாலை 15.00 மணி வரை கட்டடத்தை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கான பெறுகை விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட பெறுகை விண்ணப்பத்துடன் குறித்த கட்டடத்தின் உறுதியின் பிரதி, வரைபடத்தின் பிரதி என்பவற்றை இணைத்து தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் அலுவலகத்திற்கான கட்டடத்தை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கான பெறுகை என குறிப்பிட்டு **இல.18/9, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு எதிர்வரும் 2021.08.31 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பெறுகைதாரர் மேலதிக தகவல்களை அலுவலக நேரத்தில் 021 222 0657 என்னும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளமுடியும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,**
**வடக்கு மாகாணம்.**

(C-2553)


# அம்பாந்தோட்டையில் பொலிஸாரால் இருவர் சுட்டுப் படுகொலை

(கொழும்பு)

அம்பாந்தோட்டை சூரியவெவ - வெவேகம பிரதேசத்தில் பொலிஸாரால் இருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் சந்தேக நபர்கள் இருவரை கைது செய்ய சென்ற சந்தர்ப்பத்தில் துப்பாக்கி சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட எதிர் தாக்குதலில் இருவர் காயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த இரண்டு சந்தேக நபர்களும் சூரியவெவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு மாற்றி அனுப்பப்பட்டுள்ளனர். அங்கு குறித்த இருவரும் உயிரிழந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

தங்க சங்கிலி ஒன்றை கொள்ளையடித்துவிட்டு தப்பிச்சென்ற சந்தேக நபர்களை கைது செய்ய பொலிஸார் சென்ற போது, அவர்கள் பொலிஸார் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். இதன் போது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். (ம-03)


**காணி விற்பனைக்கு**

ஆனைக்கோட்டை காக்கைதீவில் 25 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

(7680)

தொடர்பு **074 130 2218**



## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தின் இளைப்பாறிய
புகழ்பூத்த சித்திர பாட ஆசிரியை
செல்வி
**இராசாத்தி கனகரட்ணம்**
அவர்கள் கடந்த 15.08.2021 அன்று காலமான
செய்தியறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



(C-2554)

பிரிவால் துயருறும் வித்தியாலய சமூகம்
யா / உயரப்புலம் மெதடிஸ் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை - ஆனைக்கோட்டை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்பு வலயத்தினுள் நாடு முழு முடக்கம் அவசியம்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**உலக சுகாதார ஸ்தாபனத்தின் வகைப்படுத்தலுக்கமைய தற்போது இலங்கை எச்சரிக்கை மட்டம் 4இல் உள்ள நிலையில்,முழு நாட்டையும் சிவப்பு வலயமாக அடையாளப்படுத்துவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகக்குழு மற்றும் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரத்னசிங்கம் தெரிவித்துள்ளார்.**

எனவே தற்போது பிரதேச முடக்கங்களுக்கும் அப்பால் 90 வீதத்துக்கும் அதிகமான கடுமையான போக்குவரத்து கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டியது அத்தியாவசியமாகும் எனவும் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக சுகாதார ஸ்தாபனத்தின் வகைப்படுத்தலுக்கு அமைவாக தற்போது நாம் எச்சரிக்கை மட்டம் 4 இல் உள்ளோம். 4ஆவது எச்சரிக்கை மட்டம் என்பது முடக்கத்தை அண்மித்த நிலைமையாகும்.

அதாவது சன நடமாட்டம் 90 வீதத்திற்கேனும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். திருமண நிகழ்வுகள் உள்ளிட்டவற்றுக்கு கட்டுப்பாடுகளை விதிப்பதோடு மதுபானசாலைகள், களியாட்ட விடுதிகள் உள்ளிட்டவையும் மூடப்பட வேண்டும்.

ஆரம்பத்தில் அதிகளவான தொற்றாளர்கள் இனங் காணப்படும் பகுதிகளை மாத்திரம் முடக்கும் வகையிலான பிரதேச முடக்கங்கள் முன்னெடுக்கப்பட்டன.

ஆரம்பத்திலேயே பிரதேச முடக்கங்கள் முறையாக முன்னெடுக்கப்பட்டிருந்தால் தற்போது முழு நாட்டையும் முடக்க வேண்டியேற்பட்டிருக்காது. ஆனால் தற்போதைய நிலையில் பிரதேச முடக் கங்களும் பிரயோசனமற்றவை.

நாட்டில் தற்போது காணப்படும் நிலைமை தொடருமாயின் மாதத்திற்கு 5000 மரணங்கள் வரை பதிவாகக் கூடும்.

இந்த அபாயத்திலிருந்து ஒவ்வொருவரும் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கு 90 வீதத்திற்கும் அதிக சமூக இடைவெளியைப் பேண வேண்டும். நடமாட்ட கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட வேண்டும்.

அண்மையில் பெயரளவில் மாத்திமே விதிக்கப்பட்டிருந்த நடமாட்ட கட்டுப்பாடுகளே நாட்டில் இவ்வாறானதொரு அபாய நிலைமை ஏற்படக் காரணமாகும்.

எவ்வாறிருப்பினும் தொற்றைக் கட்டுப்படுத்த தடுப்பூசி மாத்திரமே தனியொரு தீர்வாக அமையும் என்று கருதுவது தவறாகும்.

தடுப்பூசி ஏற்றிக் கொள்வதோடு சுகாதார விதிமுறைகளையும் கடுமையாக பின்பற்ற வேண்டும் எனவும் மருத்துவர் வாசன் தெரிவித்தார். (நி-5)

---


# கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு. அ.ஜெபநேசன் அவர்களின் பாசமிகு தாயார்

**அந்தோனிப்பிள்ளை பவுலிஸ்சம்மா**

அவர்கள் கடந்த 2021.08.13 ஆம் திகதி அன்று மறைவுற்றுள்ளதால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம், நல்லூர்.

C 2551


## யானைகளின் தாக்குதலால் வீடுகள் சேதம்

(திருமலை)

திருகோணமலை- பன்சல கொடல்ல பகுதியில் காட்டு யானைகளின் தாக்குதலில் இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம் பெற்றுள்ளது. (நி-5)


# நன்றி நவிலல்



அமரர். வைத்தியகலாநிதி
**லயன் சின்னத்துரை கதிரவேற்பிள்ளை**
தாயுமாய் நின்ற எம் தந்தை

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் முன்னாள் மாவட்ட வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய சிரேஷ்ட வைத்திய கலாநிதி சி. கதிரவேற்பிள்ளை அவர்கள் (13.08.2021 வெள்ளிக்கிழமை) தன் 88 ஆவது வயதில் கொழும்பில் இறைவனடி சேர்ந்தார். இவரது இறுதி கிரிகைகள் 15.08.2021 ஞாயிறு மதியம் 2:30 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் கொவிட்-19 வரையறைக்கமைய நடந்தேறியது. கட்டுப்பாடுகள் காரணமாக கலந்து கொள்ள முடியாமல் கலங்கி நின்ற அனைவரையும் அன்புடன் நினைவு கூருகின்றோம்.

வைத்திய சேவையை வாழ்வின் இலட்சியமாக கொண்டு மக்கள் சேவையே மகேசன் சேவை என வாழ்ந்த எம் தந்தை எத்தனையோ உள்ளங்களின் நினைவலைகளில் நீங்காது நிலைத்திருப்பார் என நினைத்து ஆறுதல் அடைகிறோம். அவரது மறைவுத்துயரை எம்மோடு பகிர்ந்து கொண்டு அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்த அனைத்து உறவுகளுக்கும் கரம் கூப்பி நன்றி தெரிவிக்கின்றோம்.

பிள்ளைகள்: விவேகன், கமலன், வைதேகி, நிவேதா.
[illegible] வைத்திய கலாநிதி அனுஷ்ஷந்தன், உதயகுமாரன், பிரியா, ஸ்ரீவானி.
பெறாமக்கள்: மங்களேஷ்வரன், பானுகோபன்
மற்றும் பேரப்பிள்ளைகள்.

(7674)



# முதலாம் ஆண்டு நினைவலைகள்

நிஜமாக நீங்கள் மறைந்தது
ஓராண்டு ஆனதோ
நீ இல்லா மனை
பொலிவிழந்து போனதுவோ
உன்னை நினைத்து
தினம் தினம்
நாம் ஏங்கி தவிக்கின்றோம்
காலங்கள் ஓடி கடந்தாலும்
மகனே, அண்ணா
எங்கள் உள்ளத்தில்
வைத்து பூஜிப்போம்

அமரர். தருமதுரை ரஜீபன்

| தோற்றம் | திதி:ஏகாதசி | மறைவு |
|---|---|---|
| 31.01.1985 | 18.08.2021 | 29.08.2020 |

அப்பா, அம்மா
சகோதரர்கள்
[illegible]
கட்டப்பிராய், கோப்பாய்.

(7661)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண இருபது-20 அட்டவணை அறிவிப்பு



2021 ஐ.சி.சி. ஆண்கள் இருபது-20 உலகக் கிண்ணம் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் ஓமானில் ஒக்டோபர் 17 முதல் நடைபெறவுள்ளது.

இதில் சுப்பர் 12 சுற்றின் குழு 2 இல் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஆட்டம்துபாயில் ஒக்டோபர் 24 ஆம்திகதி அரங்கேறவுள்ளது.

இரண்டு வருடங்களுக்குப் பிறகு இந்தியாவும் பாகிஸ்தானும் ஒருவருக்கொருவர் விளையாடுவது இதுவே முதல் முறையாகும்.

இறுதியாக இவ்விரு அணிகளும் 2019 இல் ஒருநாள் உலகக் கிண்ண தொடரில் ஒன்றையொன்று எதிர்த்து ஆடியது.

ஐ.சி.சி. நேற்று 2021 இருபது-20 உலகக் கிண்ணத்துக்கான அட்டவணையை அறிவித்ததால் போட்டிகளுக்கான திகதிகள் அனைத்தும் உறுதி செய்யப்பட்டுள்ளன. முதல் சுற்று ஆட்டம் ஒக்டோபர் 17 அன்று ஓமானில் தொடங்குகிறது. இறுதிப் போட்டி நவம்பர் 14 அன்று துபாயில் நடை பெறும். (4-6)




# 'ஒருத்தன சீண்டினா 11 பேர் வருவோம்'

## ராகுல் எச்சரிக்கை

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கிடையே லார்ட்சில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில், இந்திய அணி 152 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வரலாற்று வெற்றி பெற்றது.

இந்நிலையில் இந்த ஜோடி பட்டிங் செய்யும் போது இங்கிலாந்து வீரர்கள் மார்க் வுட் மற்றும்ஜோஸ் பட்லர் ஆகியோர் பும்ராவிடம் வார்த்தை மோதலில் ஈடுபட்டனர்.

இதையடுத்து போட்டி முடிவுக்கு பின் இந்திய அணியின் தொடக்க வீரரான கே.எல். ராகுல் கூறுகையில், இரு பலமான அணிகள் மோதும் போது இது போன்ற நிகழ்வுகள் நடப்பது சகஜம் தான்.


எங்களுக்கும் போட்டியின் போது இதுபோன்று சற்று வார்த்தைப் போரில் ஈடுபடுவது பிடிக்கும்.

ஆனால் எங்களின் அணியில் ஒருவரை நீங்கள் தாக்கினாலோ, பேசினாலோ நாங்கள் 11 பேரும் அவருக்கு பக்கபலமாக நின்று பதிலடி கொடுப்போம்.

எங்களது பந்துவீச்சின் போதும் நாங்கள் உத்வேகத்துடனும், ஆக்ரோஷத்துடனும் இருந்தோம்.

இதுவே நாங்கள் வெற்றி பெறுவதற்கு முக்கிய காரணம் என்று கூறினார். (4-6)

# பாரா ஒலிம்பிக்கிலும் ரசிகர்களுக்கு தடை



சமீபத்தில் நிறைவடைந்த டோக்கியோ ஒலிம்பிக்கில் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ரசிகர்கள் அனுமதிக்கப்படவில்லை.

இந்த நிலையில் எதிர்வரும் 24 ஆம் திகதி டோக்கியோவில் தொடங்கும் மாற்றுத் திறனாளிகளுக்கான பாரா ஒலிம்பிக்கிலும் ரசிகர்கள் போட்டியை பார்க்க மைதானத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று போட்டி ஒருங்கிணைப்பு கமிட்டி அறிவித்துள்ளது. ஜப்பானில் தினசரி கொரோனா பாதிப்பு 17 ஆயிரத்தை தாண்டி விட்டது.

இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ரசிகர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. (4-6)




# இரண்டாவது டெஸ்ட்; இந்தியா வெற்றி!

இங்கிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில், இந்தியக் கிரிக்கெட் அணி 151 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், 1-0 என்ற கணக்கில் இந்தியா அணி முன்னிலை பெற்றுள்ளது.

லண்டன்- லோர்ஸ் மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இப் போட்டியில், நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத் தடுப்பை தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய இந்திய அணி, 364 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதன்போது இந்திய அணி சார்பில், அதிகபட்ச ஓட்டங்களாக, கே.எல். ராகுல் 129 ஓட்டங்களையும் ரோஹித் சர்மா 83 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி, 391 ஓட்டங்களை பெற்றுக்கொண் டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜோ ரூட் 180 ஓட்டங்களையும் ஜோனி பேயர் ஸ்டோவ் 57 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இதனையடுத்து 27 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணி, 8 விக்கெட்டுகளை இழந்து 298 ஓட்டங்களை பெற்றிருந்தபோது, தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது. இதனால் இங்கிலாந்து அணிக்கு 272 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதன்போது இந்திய அணி சார்பில், அதிகபட்ச ஓட்டங்களாக ரஹானே 61 ஓட்டங்களையும் மொஹமட் ஷமி ஆட்டமிழக்காது 56 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து 272 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து அணி, 120 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் இந்திய அணி 151 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜோ ரூட் 33 ஓட்டங்களையும் பட்லர் 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக இந்தியகிரிக்கெட் அணியின் கே.எல். ராகுல் தெரிவு செய்யப்பட்டார். (4-6)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்டா வைரஸின் மூன்று பிறழ்வுகள் இலங்கையில்



(கொழும்பு)

**இலங்கையில் வேகமாக பரவி வரும் டெல்டா வகை வைரஸின் மூன்று பிறழ்வுகள் இதுவரையில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.**

நேற்று பாராளுமன்றத்தில் வைத்து கொவிட் நிலைமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதனடிப்படையில் SA 222V, SA 701S மற்றும் SA 1078S ஆகிய மரபணுக்களின் மாற்றத்திற்கு உட்பட்ட டெல்டா வைரஸ் வகைகள் இலங்கையில் இனங்காணப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (நி-5)


## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உறுப்பினரும் சமூக மருத்துவ உத்தியோகத்தர் இரத்மலானைப் பிரிவு Dr.**ஜெயந்தன்** அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் சித்திராதேவி சுந்தரமூர்த்தி**

தோற்றம் : 23.04.1942
மறைவு : 15.08.2021

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (7673)

அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம்


## கொரோனா பாதிப்புகள் குறித்த வெளியீடுகளின் பின்னால் இராணுவ அதிகாரி

### ராஜித சேனாரட்ன குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொரோனா வைரஸால் ஏற்படும் இறப்புகள் மற்றும் பாதிப்புக்களின் எண்ணிக்கைக்குப் பின்னால் ஒரு இராணுவ அதிகாரி இருப்பதாக முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் தெரிவித்தார்.

குறித்த நபரே கொரோனா வைரஸால் இறந்த அல்லது பாதிக்கப்பட்ட நபர்களின் உண்மையான எண்ணிக்கைக்கு மாறாக குறைந்த எண்ணிக்கைகளை வழங்கியதாக அவர் குற்றம் சுமத்தினார்.

கொரோனா மூலம்இறந்த அல்லது பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கையில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுக்கு இதுவே காரணம்

இந்த விவகாரத்தை விசாரிக்க வேண்டும். உண்மையான புள்ளிவிபரங்களை வழங்குவது இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று நோயை சமாளிக்க உதவும் என்றும் அவர் தெரிவித்தார்.

(நி-5)


## வீண்போகாதையா உன் தமிழ்த் தேசியப்பற்றும் தன்மான உணர்வும் விட்டுச் சென்ற விழுதுகள் நாம் விருட்சமாய் எழுந்து நிற்போம் !

### மறைந்தும் மனங்களில் வாழும் தனியார் கல்வியுலகின் விழுதுகள்

சென்றன ஆண்டுகள் 7

18.08.2021



நா.கிருஸ்ணானந்தன்
(பிரபல பொருளியல் பேராசான்)



வெக்ரர் வேலாயுதம்
(பிரபல இணைந்த கணித பேராசான்)



மகாதேவா
(பிரபல இரசாயனவியல் பேராசான்)



பசில் ஜெனதாஸா
(பிரபல வணிகக்கல்வி பேராசான்)



என்.ரி.தரன்
(பிரபல இந்து நாகரிக பேராசான்)



நாகரட்ணம்
(பிரபல இரசாயனவியல் பேராசான்)



வே.அன்பழகன்
(பிரபல புலமைப்பரிசில் பரீட்சைப் பேராசான்)





வரதராஜன் சகுந்தலா
*(20.01.1951 - 20.05.2018)*
(பொருளியல் சிறப்புக்கலைமாணி பேராதனைப் பல்கலைக்கழகம்)

தமிழ்த் தேசியப்பற்றாளர்
**சின்னத்துரை வரதராஜன்**
*(07.12.1951 - 18.08.2014)*
(ஈழத்தின் பிரபல பொருளியல் பேராசான், முன்னாள் விரிவுரையாளர், பொருளியல்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், ஆலோசகர், யாழ். எய்ட் அறக்கட்டளை, கலிங்கம் பல்சுவை இதழ்)

இறுதியாக மாணவர்களுக்கு வழங்கிய செய்தியிலிருந்து......

எனது அன்பு மாணவர்களே !

எந்தவொரு நாட்டிற்கும் இறுதியாக இரண்டு மூலவளங்கள் காணப்படுகின்றன. அந்த நாட்டின் காணிகளும் அதன் மக்களுமே அந்த மூல வளங்களாகும். எனவே நீங்கள் உங்கள் வாழ்வின் எக் கட்டத்தில் இருந்தாலும் எம் தமிழ் தேசத்தின் மண்ணையும் மக்களையும் மறக்காதீர்கள். எக் காரணத்தைக் கொண்டும் இவற்றை இழக்கச் சம்மதிக்காதீர்கள்.

இன்று எம்மிடம் கல்வி - அறிவு எனும் சொத்து மட்டுமே உள்ளது. இம் மனித மூலதனத்தை வெளியிலிருந்து எவராலும் அழிக்க முடியாது. இம் மூலதனத்தை நாம் தான் காப்பாற்றவும் வேண்டும். மேலும் உயர்த்தவும் வேண்டும். அறிவால் உயருங்கள். இந்த உலகத்தையே வெல்லமுடியும்.

தமிழனென்றோர் இனமுண்டு.தனியே அவர்க்கோர் குணமுண்டு.

பொருளியல் ஆசிரியர்
*சி.வரதராஜன்*

இவர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்

-குடும்பத்தினர்

(7675)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டெல்டா பரவல் வடக்கில் அதிகரித்தால்
# விளைவு தென்பகுதியை விட பத்து மடங்கு அதிகம்!

(சாவகச்சேரி)

**தென்பகுதியைப் போன்று வடக்கு மாகாணத்தில் டெல்டா வைரஸ் பரவுமானால் அதன் விளைவு தென்பகுதியை விட பத்து மடங்கு அதிகமாக இருக்கும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் எச்சரித்துள்ளார்.**

நேற்று சாவகச்சேரி நகர சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

கொழும்பு மாநகரசபை மேயருக்கு இருக்கும் அதிகாரம் நகர சபை தவிசாளருக்கு உள்ளது. கொழும்பு மாநகரசபையால் தேவையற்ற நடமாட்டங்களுக்கு கட்டுப்பாடு விதிக்கும் போது ஏன் அதனை சாவகச்சேரி நகரசபை செய்ய முடியாது?

சாவகச்சேரியில் உடனடியாக பல இடங்களில் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக சிகை அலங்கரிப்பு நிலையங்கள், வங்கி மற்றும் நிறுவனங்களின் வாடிக்கையாளர் சேவைப் பகுதியில் இருப்பவர்கள், வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட இடங்களில் அன்டிஜன் பரிசோ தனை மேற்கொள்ள சுகாதாரப் பகுதியினருக்கு நகரசபை பரிந்துரைக்க வேண்டும்.

அன்று கொழும்பில் ஒரு சிலருக்கு தொற்று வந்த போது நாடு முடங்கியது. ஆனால் இன்று நாட்டையே கொரோனா ஆக்கிரமித்துள்ள போதும் நாடு முடக்கப்படவில்லை.

பணியிடங்களில் தொற்று ஏற்பட்டு ஒரு பிரிவு மூடப்பட்டால்,மறு பிரிவில் கடமை புரியும் நிலை காணப்படுகிறது.

ஊடரங்கு செய்தி அறிவித்தால் உடனே முண்டியடித்துக் கொண்டு பெற்றோல் நிரப்பி வைக்கின்றனர்.எனவே எமது மக்கள் ஒன்றை முடக்கினால் அதற்கு மாற்று வழி கண்டுபிடித்து அதனூடாக பயணிக்க விளைகின்றனரே தவிர விபரீதத்தை உணர்கிறார்கள் இல்லை.

எமது மக்கள் போலி மனப்பாங்கை விட்டு சமூகப்பொறுப்புடன் நடக்க வேண்டும். தடுப்பூசி போட்டால் கொரோனா எமக்குப் பரவாது என்ற மனநிலையையும் விட வேண்டும்.

சரியான முறையில் பி.சி. ஆர்.அன்டிஜன் பரிசோதனை மேற்கொண்டால் வடக்கில் அதிக தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் இடம் தென்மராட்சியாகத் தான் இருக்கும் என மேலும் அவர் சுட்டிக்காட்டினார். (4-7-30)

# நீர் இறைக்கும் இயந்திரங்களை கிணற்றில் வீசிய விசமிகள்

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி மத்தி ஊரத்தி பகுதியில் உள்ள காணிகளில் இருந்த தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களை கிணற்றில் தூக்கி வீசிய சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

ஊரடங்கு காரணமாக யாரும் வெளியில் வராத சந்தர்ப்பத்தில் இனந்தெரியாதவர்கள் வயல்களில் இருந்த தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களை தூக்கி கிணற்றில் வீசியுள்ளனர்.

காலை வேளையில் வயல் உரிமையாளர்கள் தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களை தேடியபோது அவை கிணற்றில் தூக்கி வீசப்பட்டு இருந்தமை அவதானிக்கப்பட்டது.

சுமார் எட்டு தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் கிணற்றில் தூக்கி வீசப்பட்டு இருந்ததுடன் இரண்டு தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் காணாமல் போயுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7-104)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமான தொரு வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம் பெற்று வரும் இறை ஆசிவேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் சங்கானை சித்தங்கேணி பெரிய வளவு ஸ்ரீமகா கணபதி பிள்ளையார் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ மதுசூஷணக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்புச் செய்யப்படவுள்ளது. (4-7)

# பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் குடும்பத்தினருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தனக்கும், தனது மனைவி மற்றும் மகளுக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது டுவிட்டர் தளத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

தன்னுடன் அண்மைக்காலத்தில் நெருங்கி பழகியவர்களை தனிமையில் இருந்து, பரிசோதனைகளை நடத்திக்கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (4-7-18-33)






## நல்லைக் கந்தனே பத்தர்களை காத்தருள பற்றறுப்பாய் கொரோனா தனை

தாயகமாய்த் திகழும் யாழ்.மண்ணின் குமரனே
நல்லையில் வதிபவனே நல்லூர்க் கந்தனே!
தேவர்களை சிறைமீட்ட குகனே நீரே.
பக்தர் தனைக் காத்திடுவாய் கொடிய வைரஸ் நோயிலிருந்து கோடான கோடி மக்கள் குறை தீர்க்கும் எழிலனே-எம்
நல்லைக் கந்தனே பக்தர்களை காத்தருள
பற்றறுப்பாய் கொரோனா தனை.

நயினைக் கதிர் மகிந்தன்,
நயினை-07.

## நல்லைப் பதியுறை நல்லையனே

பாரெங்கும் பரவிடும் உன்றன் புகழ் நல்லையனே
பாவியருக்கும் ஈந்திடும் அருள் நல்லையனே
அவனியெங்கும் கலங்கிவிடும் கொரோனாவை
வந்த இடம் தெரியா தொலைத்துவிடும் நல்லையனே
நாதியற்ற நரர்களை காத்துவிடும் நல்லையனே
கலியுகம் எங்கும் காத்துவிடும் நல்லையனே
உன்றன் திருக்காட்சி தந்துவிடும் நல்லையனே

எஸ்.யு.சிவம்,
ஏழாலையம்பதி.

## கொடிய நோய் வேரோடழிய நல்லருள் புரிவாய் நல்லைக்குமரா

"அபயமளித்திடும் அம்பிகைக் குமரா-எம்
அன்பர்க்கு வாழ்வளித்திடையா
உமையவள் புதல்வா-உலகின்
கொடிய நோய் வேரோடழியவே
நல்லருள் புரிவாய் நல்லைக் குமரா
அவ்வினைக் கிவ்வினை-பதிகம்பாடி
செய்வினை தீண்டப்பெறா
திரு நீலகண்டன் திருவடி போற்றுகின்றோம்
திவ்விய தரிசனம் நல்லை வீதியில்
நாம் காண நல்லருள் புரிந்திடய்யா"

ப.பாலசுப்பிரமணியம்,
வேலணை பாலா ஜே.பி.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக நல்லூரான் கவிதைகளை 076 636 3378 என்ற Viber இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போதைய அலையை கட்டுப்படுத்த முடியாது

# விசேட வைத்திய நிபுணர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**எவ்வளவு விரைவாக தடுப்பூசி போட்டாலும் தற்போதைய கொரோனா அலையை கட்டுப்படுத்த முடியாது என விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு முடிவெடுப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

விரைவான தடுப்பூசி செயற்பாட்டில் உலகின் மற்ற நாடுகளை விட நாங்கள் முன்னணியில் இருக்கிறோம்.

ஆனால் இந்த ஊசி செயல்முறையின் அதிகபட்ச நன்மைகளைப் பெறுவதற்கு முன்பு, தற்போது துரதிர்ஷ்டமான சூழ்நிலையை எதிர்கொள்வதற்கு வருந்துகிறோம்.

இந்த தடுப்பூசியால் தற்போதைய அலையைக் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் எதிர்காலத்தில் இதன்மூலம் நன்மைகள் உண்டு.

ஜூலை 21 அன்று நாங்கள் போக்குவரத்து கட்டுப்பாடுகளை நீக்கியபோது கூட, தெமட்டகொட பகுதியில் டெல்டா வைரஸால் பாதிக்கப்பட்ட ஒருவர் அடையாளம் காணப்பட்டார்.

தற்போது நம்மைச் சுற்றியுள்ள பலருக்கு டெல்டா வைரஸ் உள்ளது.

90வீத மக்களுக்கு தடுப்பூசி போடப்பட்டிருந்தாலும், அவர்களில் பெரும்பாலோருக்கு ஒரு டோஸ் மட்டுமே போடப்பட்டுள்ளது.

இரண்டு அளவுகளையும் எடுத்து இரண்டு வாரங்களுக்குப் பிறகு ஊசி செயற்படுகிறது.

எனவே, நாடு தடுப்பூசியின் பயனை அடைய ஒன்றரை மாதங்களுக்கு மேல் ஆகும். அதுவரை, கொரோனா இறப்புகள் மற்றும் கொரோனா நோய்த் தொற்றுகள் கட்டுப்படுத்தப்படாது என அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது நிலைமை மோசமடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இப்போது அரசாங்கத்தை திட்டுவதில் எந்தப் பயனும் இல்லை. இந்த அரசாங்கத்தை குறை கூறுவதன் மூலம் தொற்றுநோயை கட்டுப்படுத்த முடியாது. நாம் செய்ய வேண்டியது எல்லாம் நம்மை நாமே பூட்டிக் கொள்வதுதான். வேறு வழியில்லை என்று குறிப்பிட்டார். (நி-5)

# சுற்றுநிருபங்களை மீறிச் செயற்படும்

## வங்கிகள், லீசிங் நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை

## இலங்கை மத்திய வங்கி அறிக்கை

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபங்களை மீறி செயற்படும் வங்கிகள் மற்றும் லீசிங் நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

கொவிட் 19 கொரோனா தொற்று அச்சுறுத்தலினால் பொது மக்கள் சிரமங்களுக்குள்ளாகியுள்ளதால் இலங்கை மத்திய வங்கியின் நிதி கட்டுப்பாட்டு பிரிவினால், லீசிங் நுகர்வோருக்கு நிவாரணமொன்று பெற்றுக் கொடுப்பதற்காக கடந்த மே மாதம் சுற்று நிருபங்கள் சில வெளியிடப்பட்டிருந்தன.

அந்த சுற்று நிருபங்களின் படி 2021 ஒகஸ்ட் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு லீசிங் நுகர்வோரிடமிருந்து தாமதத்துக்கான வட்டி அறவிடல் மற்றும் வாகனங்களை கையகப்படுத்தல் ஆகியவற்றை நிறுத்தும் படியும் பிறிதொரு நிவாரணமொன்றை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: **36 ¾** செவ் 8 சூரி1 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: **O/L** பலசரக்குக்கடை<br>எதிர்பார்ப்பு:அழகானபெண்<br>தொ.இ: **B/3382** | பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 38செவ் 3 சூரி 11 இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:. **B.Sc,** அரசமொழிகள் திணைக்களம்<br>எதிர்பார்ப்பு:**Doctor, Engineer, Accountant**<br>தொ.இ:**G/7003** |
| பிறப்பு:1984 இந்து நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: **46¼** செவ் 12 சூரி8 இல்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: **Srilanka Railway**<br>எதிர்பார்ப்பு:அழகியபடித்தபெண்,<br>தொ.இ: **B/3399** | பிறப்பு:1986 இந்து நட்சத்திரம்:விசாகம்<br>கி.பா:37செவ் 1 சூரி10 இல்<br>உயரம்:**160cm**<br>தகைமை/தொழில்: பட்டதாரி பிரதேச செயலகம்<br>எதிர்பார்ப்பு:அரசதொழில் (பட்டதாரி)<br>தொ.இ:**G/7024** |
| பிறப்பு:1972இந்து நட்சத்திரம்:ரோகினி<br>கி.பா: 13செவ் 4 சூரி9 இல்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: **Work - Business Network System**<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி கூடுதல் விருப்பம்<br>தொ.இ: **B/3402** | பிறப்பு:1991 இந்து நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா:-செவ்2 சூரி11 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:**B.Sc, Civil Engineer (GOV)**<br>எதிர்பார்ப்பு:தகுந்தவரன்<br>தொ.இ:**G/7031** |
| பிறப்பு:1983 இந்து நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: **48 ¼** செவ் 8சூரி10இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் தனியார்கம்பனிமனேஜர்<br>எதிர்பார்ப்பு:அரசஉத்தியோகம்<br>தொ.இ: **B/3424** | பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்:பூரட்டாதி<br>கி.பா:27 செவ் 8 சூரி2 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில் **BA.**விரிவுரையாளர் (அரச)<br>எதிர்பார்ப்பு:வைத்தியர், எஞ்சினியர், விரிவுரையாளர்<br>தொ.இ:**G/7060** |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொ[illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 500 அற[illegible]


# மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுமானால் அரசின் வண்டவாளம் தெரியவரும்

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர் சவால்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான இந்த அரசு மக்கள் செல்வாக்கை இழந்துவிட்டது.

மாகாண சபைத் தேர்தலொன்று நடத்தப்படுமானால் இது தெட்டத்தெளிவாக தெரியவரும்.

இவ்வாறு அபயராம விகாரையின் விகாராதிபதி முருத் தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"தற்போதைய ஆட்சியாளர்களுக் குத் தர்மம் என்றால் என்னவென்று புரியவில்லை. பிடிவாதப் போக்கில் ஆட்சியை முன்னெடுத்து வருகின்றனர். இந்த அரசுக்கு வாக்களித்த மக்கள் இன்று எம்மிடம் கேள்வி எழுப்புகின்றனர். தேரரே, உங்களை நம்பித்தானே வாக்களித்தோம், இன்று என்ன நடக்கின்றது எனக் கடும் விரக்தியை வெளியிடுவதுடன், அரசின் பயணம் மாற வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றனர்.

காஸ் இருக்கின்றதா?, கிழங்கு இருக்கின்றதா? என அன்று மகிந்த ராஜபக்ஷ கேள்வி எழுப்பினார். ஆனால், இன்று காஸ்ஸும் இல்லை; கிழங்கும் இல்லை. [illegible] பலத்தைக் காட்ட வேண்டிய நேரம் தான் வந்துள்ளது. இரவுவேளை யில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆந்தைகளுக்கும், வௌவால்களுக்குமா இவ்வாறு ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டுள்ளது? ஆட்சியாளர்கள் மக்களின் மனநிலையை அறிந்து செயற்பட வேண்டும்.

மக்களின் கோரிக்கை களுக்குச் செவி மடுக்க வேண் டும்.

முடிந்தால் மாகாண சபை அல்லது பொதுத்தேர்தலை நடத்திப் பாருங்கள். அரசு மீது மக்களுக்குள்ள நம்பிக்கை என்னவென்பது தெளிவாகத் தெரியவரும். ஜே.ஆர். அன்று ஆறில் ஐந்து பெரும்பான்மையைப் பெற்றார்.

ஆனால், அடுத்த தேர்தலிலேயே அக்கட்சியின் எம்.பிக்கள் எண்ணிக்கை 8 ஆகக் குறைந்தது.

மக்களின் கோரிக்கை ஏற்கப்படாமையே இதற்குப் பிரதான காரணம் என்பதை தற்போதைய அரசும் புரிந்துகொள்ள வேண்டும் என தேரர் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# களையைக் கட்டுப்படுத்த தவறின் நெல் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படும்

## கிளி.மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்

(தருமபுரம்)

**கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெற்செய்கையில் களை நெல்லின் தாக்கம் அதிகரித்து வருவதால் விவசாயிகள் குறித்த நெற் களையை கட்டுப்படுத்த தவறின் எதிர்காலத்தில் மாவட்டத்தில் நெல் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்படும் அபாயம் உள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு நேற்று கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

குறித்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெற்செய்கை , மானாவாரி செய்கை பல ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாவட்டத்தின் முரசுமோட்டை, உருத்திரபுரம், கணேசபுரம், பூநகரி போன்ற பகுதிகளில் களை நெல்லின் தாக்கம் அதிகளவு பரவிவருகிறது.

குறித்த களையினை ஆரம்பத்திலே விவசாயிகள் கட்டுப்படுத்த வயலில் நீர் உள்ள போதும், விதைப்பதற்கு முன்பு விதைகளை சுத்திகரித்து, நீர்ப்பாசன வாய்க்கால்களை சுத்தம் செய்து நெல்லை விதைப்பதன் மூலம் ஓரளவு கட்டுப்படுத்த கூடியதாக இருக்கும்.

ஆரம்பத்திலே குறித்த களையை விவசாயிகள் இனம் கண்டு கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

களையின் சிவப்பு நிறமாகவும் நெல்லை விட வேகமாகவும் வளரக்கூடியது.

இனி வரும் காலங்களில் களைநாசினி பயன்பாடு இல்லாது போனால் மேலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே விவசாயிகள் ஒன்றிணைந்து ஆரம்பத்திலே கட்டுப்படுத்த வேண்டும் என தெரிவித்தார். (7-4-6-316)

# மின்கசிவு; கடை தீக்கிரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பிரதான வீதியில் தண்ணீர் சுத்திகரிப்பு தொழில்நுட்ப வியாபார நிலையத்தில் ஏற்பட்ட மின் கசிவின் காரணமாக குறித்த கடையில் தீப்பரவல் ஏற்பட்டு கடையில் இருந்த இலத்திரனியல் உபகரணங்கள் அனைத்தும் எரிந்து நாசமாகி உள்ளன.

யாழ்ப்பாண மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவு அவ்விடத்துக்கு விரைந்து வேகமாக செயற்பட்டதன் காரணமாக பாரிய தீ விபத்து தடுக்கப்பட்டுள்ளது. (7-4-6-33)



# கொரோனா நோயாளி தப்பித்து ஓட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட நபர் வைத்திய சாலையில் இருந்து பின் கதவு வழியாக தப்பித்து ஓடியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மதியம் வைத்திய சாலைக்கு சிகிச்சை பெற வந்த இளைஞனுக்கு அன்டிஜன் பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட் டுள்ளது.

அதனால் அவரை வைத்தியசால்யில் உள்ள கொரோனா விடுதியில் அனுமதிக்க வைத்தியசாலைப் பணியாளர்கள் முற்பட்ட போது அவர் வைத்தியசாலையின் பின் கதவு வழியாக தப்பித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கோப்பாய் பகுதியைச் சேர்ந்த 26 வயது தொற்றாளர் ஒருவரே இவ்வாறு தப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(7-4-30)

# வீதி சீரின்மையால் பேருந்து இடைநிறுத்தம்



(அக்கராயன்)

கடந்த மாதம் அக்கராயன் முக்கொம்பன் வழியாக யாழ்ப்பாணத்திற்கு நடை பெற்ற இலங்கை போக்கு வரத்து சபையின் பேருந்து சேவை அக்கராயனுக்கும் முக்கொம்பனுக்கும் இடையில் வீதியில் காணப்பட்ட இரு குழிகள் காரணமாக சேவை இடைநிறுத்தப்பட்டது.

இதன் காரணமாக 5,0 00 வரையான குடும்பங்க ளின் போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டன. அக்கராயன் பிரதேச வைத்தியசாலை, கிளிநொச்சி நகரம் என்பவற்றிற்கு வருவதில் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர்.

இந்நிலையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அக்கராயனுக்கும் முக்கொம்பனுக்கும் இடையிலான வீதியில் காணப்படுகின்ற முக்கிய குழிகளை மூடி பேருந்து சேவை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் முக்கொம்பன் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(7-4-6-350)


# சேதன பசளை உற்பத்தியை ஊக்குவிப்பது தொடர்பில் விழிப்புணர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளுக்கு சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிப்பது தொடர்பிலான விழிப்புணர்வுப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த சேதனப் பசளை ஊக்குவிப்புப் பிரசாரத்தினை வடமாகாண விவசாயத் திணைக்களம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களம்என்பனஇணைந்து முன் னெடுத்துள்ளன.

எதிர்வரும் காலபோகத்திற்கு குறிப்பாக நெற்செய்கை, மறுவயல் பயிற்செய்கை, மரக்கறிப் பயிர்ச் செய்கை, பழப்பயிர்ச் செய்கை என்பவற்றிற்கு பெருமளவான சேதனப் பசளையின் தேவை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. எனவே அந்த சேதனப் பசளையினை உற்பத்தி செய்யும் போது விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டிய முறைமைகள் உள்ளிட்ட விடயங்கள் இந்த விழிப்புணர்வு பிரசாரத்தினூடாக விவசாயிகளுக்குத் தெளிவு படுத்தப்படுகின்றது.



அதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் நேரில் சென்று விவசாயிகளுக்கு சேதனப் பசளை ஊக்குவிப்புத் தொடர்பான விழிப்புணர்வு பிரசாரங்களைமேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

**18.08.2021**
**ஆவணி 02 புதன்கிழமை**
**ஏகாதசி பின்னிரவு 12.37 மணிவரை**
**மூலம் பின்னிரவு 12.23 மணிவரை**
**சுபநேரம் 4.35 - 6.05 மணிவரை**
**இராகுகாலம் 12.05 - 1.35 மணிவரை**
**சந்திராஷ்டமம்:-கார்த்திகை, ரோகினி**
**ஏகாதசி விரதம்**

**வளவன்**


மேஷம்

**அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் கூடும்.**


ரிஷபம்

**குடும்பத்தில் சிலசில குழப்பங்கள் தோன்றி மறையும், வெளியூர் பயணங்களால் அலைச்சல்கள் ஏற்படலாம், உடல் நலம் பற்றிய கவலை உருவாகி மறையும்.**


மிதுனம்

**ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், நண்பர்கள் சந்திப்பால் பரவசம் அடைவீர்கள், எடுத்த காரியங்கள் விரைவில் கைகூடும், போசன சுகமுண்டு.**


கடகம்

**சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், செய்தொழிலில் சிறப்புகள் கூடும் நாள்.**


சிம்மம்

**எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம் பெறலாம்.**


கன்னி

**மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், வாகன சுகமுண்டு, நண்பர்கள் சந்திப்பு உண்டு.**


துலாம்

**உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.**


விருச்சிகம்

**நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி கூடும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மை உண்டு.**


தனுசு

**வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், சவால்களை சமார்த்தியமாக் சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, சோம்பலை விலக்குவது நல்லது.**


மகரம்

**குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, எடுத்த காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.**


கும்பம்

**எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.**


மீனம்

**மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.**

**உனது வார்த்தை மற்றவர் செவியில் தேன் போல பாயட்டும்**

# தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளும்படி அரசாங்கம் கட்டாயப்படுத்துவது மனித உரிமை மீறல்

## சிங்கள ராவய கட்சித் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர்

(கொழும்பு)

கொரோனா தடுப்பூசிவேலைத்திட்டத்துக்கு அமைவாக பலாத்காரமாக கொரோனா தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் முறைப்பாடொன்று சிங்கள ராவய கட்சித் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரரினால் நேற்று கையளிக்கப்பட்டது. இது குறித்து அவர் கூறுகையில், "கொரோனா தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளும்படி அரசாங்கம் கட்டாயப்படுத்துவது அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

தடுப்பூசி ஏற்றாதவர்கள் அரச நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களுக்கு செல்வதற்கு தடையென அரசாங்கம் எவ்வாறு கூற முடியும். இந்த தடுப்பூசிகளுக்கு உத்தரவாதம் உள்ளதா?

இதனை ஏற்றிக்கொள்வதால் வைரஸ் தொற்று ஏற்படாதெனவும் மரணிக்கமாட்டார்கள் எனவும் உத்தரவாதம் உள்ளதா?

ஆகவே, கொரோனா தடுப்பூசிவேலைத்திட்டத்துக்கு அமைவாக பலாத்காரமாக கொரோனா தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாம் எமது குழுவுடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடொன்றை கையளித்தோம்" எனத் தெரிவித்தார். (7-4)

# கொரோனா தொடர்பில் நீரிழிவு நோயாளர்கள் அவதானம் தேவை

(யாழ்ப்பாணம்)

நீரிழிவு நோயாளர்களுக்கு கொரோனா தொற்று ஏற்படும் போது அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் அதிகமாக இருக்கும் என மருத்துவர் எம். அரவிந்தன் தெரிவித்தார்.

நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா தொற்று இன்னும் எத்தனை வருடங்களுக்கு நிலைத்து நிற்கும் எனக் கூற முடியாது.

கொரோனா போன்ற தொற்று நோய்களை கவனத்திற் கொள்வது போல தொற்றா நோய்கள் தொடர்பிலும் விழிப்பாக இருக்க வேண்டும்.

தொற்றா நோய்களில் முக்கியமானவை நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், இருதயநோய்கள், சுவாச நோய்கள் போன்றனவாகும்.

யாழ். மாவட்டத்தை பொறுத்தவரையில் 15 சதவீதமானவர்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். போதனா வைத்திய சாலைக்கு வர முடியாதவிடத்து வீட்டிற்கு அருகிலுள்ள பிராந்திய வைத்தியசாலைகளில் வைத்தியர்களின் அறிவுரைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த கொரோனா காலப் பகுதியில் தொற்றா நோய்கள் உடையவர்கள் மட்டுமல்லாது அனைவரும் உணவுப் பழக்க வழக்கங்கள் தொடர்பிலும் அவதானமாக இருக்க வேண்டும் என்றார். (7-4)

# புலம்பெயர் மக்களின் உதவிகளை உடனடியாக நாடுங்கள்-சஜித்




(கொழும்பு)

எமது நாட்டின் சுகாதார கட்டமைப்பை பலப்படுத்த சர்வதேச புலம்பெயர் மக்களின் முழுமையான உதவிகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.

அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க சகல தூதரகங்களுக்கும் ஒரு இலக்கை கொடுத்து சர்வதேசத்தில் வாழும் புலம்பெயர் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வைரஸ் தொற்று சட்ட மூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார். (7-4)



வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப்பிரிவால் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு கல்வி விழிப்புணர்வு கூட்டம் யா/குட்டியப்புலம் அ.த.க. பாடசாலையில் கடந்த 3 ஆம் திகதி பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் ஒட்சிசன் உற்பத்தி மையம் திறப்பு



(திருவள்ளூர்)

**திருவள்ளூர் அரசு மரு த்துவக்கல்லூரி மருத்து வமனையில் நோயாளிகள் பயன்பெறும் நோக்கத்தில் தனியார் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பு நிதி ரூ.1.20 கோடியில் 333 லீற்றர் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட ஒட்சிசன் உற்பத்தி மையத்தை பால் வளத்துறை அமைச்சர் சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்.**

இது தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒட்சிசன் உற்பத்தி நிலையம் தனியார் தொண்டு நிறுவனம் மற்றும் தன்னார்வலர்கள் பங்களிப்புடன் டென்மார்க் நாட்டில் இருந்து நேரடியாக உற்பத்தி இயந்திரம் ரூ. 1.20 கோடியில் இறக்குமதி செய்து நிறுவப்பட்டுள்ளது.

இந்த மையம் மூலம் நிமிடத்திற்கு சுமார் 333 லீற்றர் ஒட்சிசன் உற்பத்தி செய்ய முடியும். இந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளின் 75 படுக்கைகளுக்கு 24 மணி நேரமும் தங்கு தடையின்றி ஒட்சிசன் அளிக்க முடியும். அதே போல், இந்த மையம் மூலம் நாள் தோறும் 60 சிலிண்டர்களில் ஒட்சிசன் நிரப்ப முடியும்.

ஏற்கெனவே இம் மருத்துவமனையில் ரூ.98 இலட்சத்தில் தனியார் நிறுவன பங்களிப்பில் வழங்கிய ஒட்சிசன் உற்பத்தி நிலையம் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த ஒட்சிசன் உற்பத்தி நிலையங்கள் மூலம் உற்பத்தியாகும் ஒட்சிசன் கொரோனா தொற்றினை எதிர்கொள்ள ஏதுவாக இருக்கும். அதோடு இம் மருத்துவமனைக்கு தேவையான ஒட்சிசன் உற்பத்தி பெறப்பட்டு தன்னிறைவு பெற்ற சிகிச்சைமையமாகவும் உருவாகி உள்ளதாக என அவர் தெரிவித்தார். (7-4)

## ஆப்கானில் இந்திய தூதரகம் மூடல் இந்தியர்கள் வெளியேற இ-விசா

(புதுடெல்லி)

ஆப்கானிஸ்தானில் உள்ள இந்திய தூதரகம் மூடப்பட்டதையடுத்து, இந்தியர்கள் வெளியேற 'இ-விசா'வை மத்திய அரசு அறிமுகம் செய்துள்ளது.

ஆப்கானில் பதற்றமான சூழல் நிலவுவதால் அங்குள்ள இந்திய தூதரகம் மூடப்படுவதாக அறிவித்துள்ள மத்திய அரசு, தூதரக அதிகாரிகளை உடனடியாக தாயகம் திரும்புவதற்கான ஏற்பாடுகளை செய்தது. இதையடுத்து, இந்திய விமானப் படையின் விமானம் மூலம் நேற்றுக் காலை தூதரக அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை பத்திரமாக மீட்டு காபூல் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுள்ளனர்.

மேலும், ஆப்கன் நாட்டை விட்டு வெளியேறுவதற்காக அந்நாட்டு மக்கள் மற்றும் பிற நாட்டு மக்கள் பலர் காபூல் விமான நிலையத்தில் நேற்று முன்தினம் முதல் குவிந்து வருவதால், இந்தியர்களை பத்திரமாக மீட்க காபூலில் பாதுகாப்பு பணியை மேற்கொண்டுள்ள அமெரிக்க அதிகாரிகளுடன் இந்திய வெளியுறவுத் துறையினர் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

இந்திய தூதரகம் மூடப்பட்டுள்ளதால், ஆப்கானிலிருக்கும் இந்தியர்கள் வேகமாக வெளியேறுவதற்காக விரைந்து அனுமதி அளிக்கும் வகையில் இ-விசா முறையை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. (7-4)

## பிலிப்பைன்ஸில் 16 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் சமர் பகுதியில் இராணுவத்தால் நடத்தப்பட்ட தாக்குதலில் 16 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இராணுவத் தலைவர் ரமோன் சகலா தாக்குதல் குறித்து அளித்த தகவலில் , ""நியூ பீபுள்ஸ் ஆர்மி" அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் பதுங்கியிருந்த இடத்தை உறுதி செய்த இராணுவ இரகசியப் பிரிவின் தகவலின் அடிப்படையில் அங்கு தேடுதலில் ஈடுபட்டனர் அப்போது அங்கிருந்த தீவிரவாதிகள் இராணுவத்தினரை தாக்க ஆரம்பித்தனர் . உடனே பதில் தாக்குதல் கொடுத்ததில் 16 பேர் உயிரிழந்தனர். அவர்களிடமிருந்து 19 சக்திவாய்ந்த ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது " எனத் தெரிவித்தார். "நியூ பீபுள்ஸ் ஆர்மி" என்கிற அமைப்பு 1969 ஆம் ஆண்டு முதலே அரசிற்கு எதிராக போராடிவரும் அமைப்பாகும். தற்போது இந்த அமைப்பில் 3,000 பேர் இருப்பதும், முக்கியமாக கிராமங்களில் தாக்குதலை நடத்துவதும் குறிப்பிடத்தக்கது. (7-4)

## பயிர்களின் வளத்தை மதிப்பிட ட்ரோன் பயன்பாட்டிற்கு அனுமதி

(சென்னை)

இந்தியா முழுவதும் சென்னை உள்ளிட்ட நகரங்களில் இயங்கும் 'குறிப்பிட்ட 10 நிறுவனங்கள் நிபந்தனையின் அடிப்படையில் சிறியரக ஆளில்லா விமானத்தை (ட்ரோன்) இயக்குவதற்கு சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து தலைமை இயக்குநரகம் அனுமதி அளித்துள்ளது.

சென்னையில் உள்ள டிராக்டாஸ் அண்ட் ஃபாம் எக்யூப்மென்ட் நிறுவனம், பயிர்களின் வளத்தை மதிப்பிடுவதற்கும், பயிர்களுக்கு நோய் ஏற்படுவதைத் தடுக்கவும் ட்ரோனை பயன்படுத்தி திரவங்களைத் தெளிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேபோல, கர்நாடக அரசுக்கும், மும்பை, மேற்கு வங்கத்தின் பான்பூர், ஹைதராபாத், ஆமதாபாத், மும்பை, புணே ஆகிய நகரங்களில் உள்ள நிறுவனங்கள் குறிப்பிட்ட பணியை மேற்கொள்வதற்காக ஆளில்லா விமானத்தைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (7-4)

## சீர்மிகு நகரத் திட்டத்தினால் இலவச வைபை வசதி

(சென்னை)

சென்னை மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பல்வேறு வகையான திட்டப்பணிகள் மேற் கொள்ளப்படுகின்றன.

இந்த திட்டத்தின் சிறப்பு அம்சமாக நகரின் பல்வேறு இடங்களில் 49 ஸ்மார்ட் கம்பங்கள் நிறுவப்பட்டுள்ளது. இந்த கம்பங்களில் உள்ள 'வைபை' தொடர்பை பொதுமக்கள் 30 நிமிடங்களுக்கு இலவசமாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

பொதுமக்கள் இலவச வைபை வசதி பெறுவதற்கு தங்களது கைபேசி எண்ணை பதிவு செய்து ஓ.டி.பி மூலம் இந்த சேவையை பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் பொதுமக்கள் இலவச வைபை இணைப்பு அமைக்கப்பட்டுள்ள 49 ஸ்மார்ட் கம்பங்கள் உள்ள இடங்களை மாநகராட்சியின் https://chennaicorporation.gov.in/gcc/images/WiFiSmartPol.pdf என்ற இணையதள இணைப்பை பயன்படுத்தி தெரிந்து கொள்ளலாம் என்று சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது. (7-4)


## ஆப்கானிஸ்தானின் ...
## ஜோ பிடனே ப...
### பதவி விலக வேண்டுமென ட்ரம்...

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தானின் வீழ்ச்சிக்கு பொறுப்பு ஏற்று ஜனாதிபதி ஜோ பிடன் பதவி விலக வேண்டும் என அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க வரலாற்றில் மிகப்பெரிய தோல்விகளில் ஒன்றாக இது அமைந்துள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆப்கானிஸ்தானின் இந்த நிலைமைக்கு அமெரிக்க படைகளை அவசரமாக திரும்ப பெறும் ஜனாதிபதி ஜோ பிடனின் தவறான முடிவே காரணம் என பல்வேறு தரப்பிலும் குற்றம் சாட்டப்பட்டு வருகிறது.




ஆப்கானிஸ்தானில் இப்படி நடக்க அனுமதித்ததற்கு ஜோ பிடன் அவமானத்துடன் இராஜினாமா செய்ய வேண்டிய நேரம் இது. எந்த எதிர்ப்பும் இல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிநாடு

# ஆப்கானிஸ்தானில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அமைய வேண்டும்- ஐ.நா



(நியூயோர்க்)

**ஆப்கானிஸ்தானை பயங்கரவாத அமைப்பு களின் தளமாகவும் புகலிட மாகவும் மீண்டும் பயன்படுத்தாமல் தடுக்க சர்வதேச சமூகம் ஒன்றிணைய வேண்டும் என ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் தெரிவித்தார்.**

ஆப்கானிஸ்தானில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அமைய வேண்டும் என்று ஐ.நா.பாதுகாப்பு கவுன்சில் வலியுறுத்தியுள்ளது.

கவுன்சில் வெளியிட்ட அறிக்கையில், 'ஆப்கானிஸ்தானில் உடனடியாக வன்முறை முடிவுக்கு வர வேண்டும். அனைத்து போர் நடவடிக்கைகளும் உடனடியாக கைவிடப்பட வேண்டும். அந்நாட்டில் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அமைய வேண்டும். அந்த அரசில் பெண்களுக்கும் சம அளவிலும் அர்த்தமுள்ள வகையிலும் பங்கிருக்க வேண்டும். ஆப்கானிஸ்தானில் உள்ள எந்தவொரு தனி நபரோ, குழுவோ, தலிபான்களோ பிற நாட்டில் உள்ள பயங்கரவாதிகளை ஆதரிக்கக் கூடாது. ஆப்கானி ஸ்தானின் தற்போதைய நெருக்கடிக்கு அமைதியான முறையில் தீர்வு காணப்பட வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும் ஐ.நா. பொதுச் செயலர் அன்டோ னியோ குட்டெரெஸ் கருத்துத் தெரிவிக்கையில்,

அந்நாட்டில் இருந்து அகதிகளாக வருவோரை உலக நாடுகள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களை நாடு கடத்த வேண்டாம்.ஆப்கானிஸ்தானில் அடுத்து வரும் நாட்கள் மிக முக்கியமானதாக இருக்கும். அந்நாட்டு மக்களை நாம் கைவிட முடியாது கைவிடவும் கூடாது என்று தெரிவித்தார். (7-4)

## ஈரானில் அதிகரிக்கும் கொரோனா

(தெஹ்ரான்)

தற்போது ஈரானில் கொரோனா பரவல் அதி கரித்து வருவதோடு பலி எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

ஒரு நாளில் சராசரியாக 655 பேர் கொரோனாவால் உயிரிழந்திருப்பதாகவும் 41,914 பேர் சிகிச்சையில் இருப்பதாகவும் அந்நாட்டு சுகாதாரத்துறைசார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தொற்றில் பாதி க்கப்படுபவர்களின் எண் ணிக்கையும் கணிசமாக உயர்ந்து வருவதால் 5 நாள் ஊரடங்கை அரசு அறிவித்துள்ளது. இதனால் மாவட்டம் விட்டு மாவட்டம் செல்லவும் வேறு இடங்களுக்கு பயணங்களை மேற்கொள்ளவும் தடை விதிக்கப்பட்டுள்ளது .

கொரோனாவின் தாக்கம் தீவிரம் அடைந்து வரும் நிலையிலும் வெறும் 40% மக்கள் மட்டுமே முகக் கவசம் அணிந்து சமூக இடை வெளியை கடைபிடிப்பதா கவும் 4% மக்கள் தான் தடுப்பூசி எடுத்துக்கொண்டதாகவும் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. (7-4)

## ஆப்கான் இராணுவம் போராட தயாரில்லை இதுவே அமெ.படை வெளியேற காரணம்

### பிடன் தெரிவிப்பு



(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தானை கட்டமைப்பது ஒன்றும் அமெரிக்காவின் குறிக்கோள் அல்ல. பயங்கரவாதத்தை ஒழிக்கவே அமெரிக்க இராணுவம் அங்கு சென்றது. அமெரிக்காவின் நோக்கம் நிறைவேறி விட்டதால் இராணுவம் அங்கிருந்து வெளியேறியது.

ஆப்கான் நாட்டில் நிலவி வரும் நிலவரம் தொடர்பாக நாட்டு மக்களுக்கு உரையாற்றுகையிலேயே அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தலிபான்களை ஒடுக்க ஆப்கான் இராணுவத்திற்கு அமெரிக்கா அனைத்து வகையிலும் உதவியது. தலிபான்களுக்கு எதிராக போராடாமலே ஆப்கானிஸ்தான் இராணுவம் முழுமையாக சரணடைந்துள்ளது. ஆப்கான் இராணுவமே போராட தயாராக இல்லாத நிலையில் அமெரிக்க வீரர்கள் போரில் இழப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆப்கானில் இருந்து அமெரிக்கப் படைகளை திரும்பப் பெறும் முடிவில் உறுதியாக உள்ளேன். ஆப்கானிஸ்தான் மக்களுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவு அளிக்கும் எனவும் தெரிவித்தார்.

தலிபான்கள் பிடியில் ஆப்கான் சென்ற பிறகு ஜனாதிபதி பிடன் ஆற்றும் முதல் உரை இதுவாகும். (7-4)

| உலகளவில் கொரோனா |
|---|
| உயிரிழப்பு :-4 386 178 |
| தொற்று :-208 795 101 |
| (நேற்றைய மாலை நிலவரம்) |

## ன் வீழ்ச்சிக்கு பொறுப்பு ட்ரம்ப் வலியுறுத்து



ப்படி
ஜோ
ரோஜி
நேரம்
ல்லா

மல் ஆப்கானிஸ்தான் தலிபான்கள் வசமாகியுள்ளது. அமெரிக்க வரலாற்றில் மிகப்பெரிய தோல்விகளில் ஒன்றாக இது வரலாற்றில் இடம்பிடிக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

நான் ஜனாதிபதியாக இருந்தால் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறுவது மிகவும் வித்தியாசமானதாகவும், வெற்றிகரமானதாகவும் இருந்திருக்கும் எனவும் ட்ரம்ப் கூறியுள்ளார்.

ஆப்கானி ஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகளை திரும்பப் பெறும் முடிவு கடந்த ட்ரம்ப் ஆட்சிக் காலத்திலேயே எடுக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (7-4)

## ஹெய்டி நிலநடுக்கம் பலி 1419 ஆக உயர்வு

(போல்ட்-அவு-பிரின்சிஸ்)

ஹெய்டியை உலுக்கிய நிலநடுக்கத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 1,419 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன், காயமடைந்தவர்களின் தொகையும் 6,900 ஆக உயர்ந்துள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களைத் தேடி மீட்பதுடன், சடலங்களையும் மீட்கும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



பாதிக்கப்பட்ட பகுதிகளில் மழை பெய்து வருவதால் மீட்புப் பணிகளில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அத்துடன், ஆங்காங்கு நிலச்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

இதேவேளை, நிலநடுக்கத்தால் பல ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் உடனடி உதவிகள் கிடைக்காமல் அவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொழும்பிற்கு வர வேண்டாம்!

## கொழும்பு மாநகர மேயர் ரோசி



(கொழும்பு)

கொவிட் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பேரில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் நாடு ஆபத்தான நிலையை நோக்கி நாளுக்கு நாள் சென்று கொண்டிருப்பதாக கொழும்பு மாநகர மேயர் ரோசி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

எனவே அவசியத் தேவை தவிர ஏனைய தேவைகளுக்கு பொதுமக்கள் எவரும் கொழும்புக்கு வருகை தரவேண்டாம் என அவர் பொதுமக்களிடம் விசயமாக கேட்டுக் கொண்டுள்ளார்.

கொழும்பு நகருக்கு வருவது உயிருக்கு ஆபத்தானது என்பதால் கொழும்புக்கு வருவது அவசியமா என்பதிலும் பார்க்க முடிந்தவரை வீட்டிலேயே இருக்குமாறு மக்களை அவர் கேட்டுக்கொண்டார்.

கொவிட் வைரஸ் கொழும்பு நகரம் முழுவதும் வேகமாக பரவி வருவதாகவும், ஒவ்வொரு பகுதியிலும் மற்றும் வர்த்தக இடங்களிலும் நோய்த் தொற்றுகள் பதிவாகியுள்ளதாகவும், ஒவ்வொரு நாளும் அதிக எண்ணிக்கையில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்கள் இறப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 146 பேர் மட்டுமே தடுப்பூசி பெற்றுள்ளனர்

(கொழும்பு)

225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 146 பேர் மட்டுமே கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசிகளைப் பெற்றுள்ளதாக தகவல் அறியும் உரிமை தெரிவித்துள்ளது.

ஓகஸ்ட் 12ஆம் திகதி தகவல் அறியும் உரிமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் செயற்றிட்டம் பெப்ரவரி 16ஆம் திகதி தொடங்கியது.

எனினும், தற்போதுவரை 146 பேர் மட்டுமே கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசிகளைப் பெற்றுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# அரசின் தவறுகளால் மக்கள் மடிகின்றனர்

## ஜனாதிபதி பதவி விலக வேண்டும் ஐ.ம.ச.வலியுறுத்து

(கொழும்பு)

"கொரோனாத் தடுப்பூசிகளைத் துரிதமாகப் பெறுமாறு அரசை நாம் வலியுறுத்தும் போது பாணியின் பின்னால் ஓடினர். பானையை ஆற்றில் போட்டுக் கூத்துக் காட்டினர். அரசு இவ்வாறு இழைத்த தவறுகளால் மக்கள் இன்று செத்து மடிகின்றனர்." இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியுள்ளது.

"மக்கள் உறங்கும் வேளையில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பதில் எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை. இந்த அரசு மடத்தனமான முடிவுகளையே எடுக்கிறது. தனக்குப் போதிய அனுபவம் இல்லாவிட்டால் முடியுமான ஒருவரிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு ஜனாதிபதி பதவி விலக வேண்டும்" என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகவியலாளர் மாநாடு அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி-5)

# சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றினால் ஊரடங்கை அமுல்படுத்த தேவையில்லை

## அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ



(கொழும்பு)

சுகாதார அறிவுறுத்தல்களை முறையாக பின்பற்றினால் ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய தேவை கிடையாது என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஆகவே நாட்டை முடக்குவது தொடர்பில் மாத்திரம் கருத்துரைப்பது அவசியமற்றது.

மேலும், படுமோசமான எதிர்க்கட்சியினரே தற்போது செயற்படுகிறார்கள். கொவிட் தாக்கத்தை அரசியல் நோக்கத்திற்காக பயன்படுத்திக் கொள்வதை எதிர்த்தரப்பினர் முதலில் தவிர்த்துக் கொள்ள வேண்டும்

அத்துடன், ஒன்றிணைந்து செயற்பட்டால் மாத்திரமே தற்போதைய நெருக்கடியான நிலையை வெற்றி கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2384

### செறின்



திருமணம் என்பது Loan Application மாதிரி தான்,
பணம் கிடைக்கின்ற மகிழ்ச்சியிலே 'Terms and Conditions' பார்க்காமல்
கையெழுத்துப் போட்டுட்டு அப்புறம் படாதபாடு பட வேண்டியது!

### சாம்

அமைச்சர் :- மன்னா இரவில் எதற்காக ஊரடங்கு போட்டுள்ளீர்கள்
மன்னர் :- கொரோனா எதனால் வந்தது
அமைச்சர் :- வௌவாலால்
மன்னர் :- வௌவால் எப்போது வெளியில் வரும்
அமைச்சர் :- இரவில்
மன்னர் :- வௌவாலை முடக்கி விட்டால் கொரோனாவை அடக்கி விடலாம்



### ஏஞ்சலின்

பரீட்சை விடுமுறை நாட்களில்




இந்த பிச்சைக்காரங்க தொல்லை தாங்க முடியலை




யம்மா நான் தாம்மா... கிரவுண்ட்ல கிரிக்கெட் விளையாடிட்டு வாரன்

### லக்ஷனியா




எதற்கு சார் Night இல் மட்டும் Curfew




பகலிலையும் போட்டால்தானே நீங்கள் 5000/= கேட்பீங்கள்

### ஜெனீபர்

எப்படி இருக்க செல்லம்.மனசே சரியில்லை உன்னோட ஞாபகமாக இருந்துச்சி அதான் போன் பண்ணினேன்.



மனைவி : இவ்வளவு ஆசை இருக்கு என்றால் ஏன் காலையில் என் கூட சண்டை போட்டீங்கள்?



ஐயையோ... வீட்டு நம்பருக்கு போன் பண்ணிட்டேன் போல இருக்குதே

### பிரதீப்

கல்யாண புரோக்கர் :- வடிவான பெட்டை, நல்ல குணம், வசதியான குடும்பம், ஜாதகக்குறிப்பும் பொருந்திட்டு பேசி முடிச்சிடலாமா?



அம்மா :- தடுப்பூசி போட்ட காட் இருக்கா? அத மட்டும் சொல்லு

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடக்க வேண்டிய நேரத்தில் முடக்காது

# நாட்டை நாசமாக்கி விட்டார்கள்

## தேவால்ஹிந்த அஜித தேரர் ஆவேசம்

(கொழும்பு)

**தமது குடும்பத்தில் உள்ள செல்லப் பிராணிகளுக்கும் அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கு தயங்காத ராஜபக்ஷ ஆட்சியாளர்களால், நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க முடியாது என தென்னிலங்கையின் பௌத்த துறவியான தேவால்ஹிந்த அஜித தேரர் தெரிவித்துள்ளார்.**

சமூக வலைத்தளமான பேஸ்புக்கில் காணொளியொன்றை வெளியிட்டுள்ள தேரர், இலங்கை வரலாற்றில் ஒரு பயனற்ற ஆட்சியாளராக மஹிந்த ராஜபக்ஷ இடம் பிடிப்பதை தடுக்க எவராலும் முடியாது எனவும் தெரிவித்தார்.


யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தார் அதற்காக இந்நாட்டு மக்கள் மதித்தார்கள், ஆனாலும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தது மாத்திரமே. அதுவும் தானாக தான் நடந்தது. நான் உறுதியாக சொல்கின்றேன். எப்போது பேசினாலும் நீங்கள் யுத்தத்தை முடித்ததை மட்டுமே சொல்கின்றீர்கள்.

நாடு முழுவதும் அபிவிருத்தி செய்ததாக சொல்கின்றீர்கள். ஆனால் உலகத்தில் பல நாடுகளிடம் கடன் வாங்கி இந்த நாட்டில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைகளையும் கடனாளிகளாக மாற்றித்தான் நாட்டை அபிவிருத்தி செய்துள்ளீர்கள். நாட்டின் வளங்கள் இன்று நாட்டில் எங்குமே இல்லை. நாட்டில் அனைத்து வளங்களையும் கொள்ளையடித்து இந்த நாட்டை நாசம் செய்துவிட்டீர்கள். இவர்களின் பாவங்களைத் தான் இன்று அப்பாவி மக்கள் அனுபவிக்கின்றார்கள்.

இந்த நாட்டின் செல்வங்களான சிறுவர்களுக்கு போதைப் பொருள் கொர்டுத்து நாட்டை சீரழிக்கின்றனர். இந்த ராஜபக்ஷ ஆட்சியாளர்களை தவிர வேறு எவரும் இந்த நாட்டை இவ்வளவு நாசம் செய்யவில்லை.

கொரோனாவை இவர்கள் வேண்டுமென்றே பரப்பினார்கள். நாட்டை மூடவேண்டிய நேரத்தில் மூடவில்லை. இப்பொழுது நாட்டை மூட தீர்மானிக்கின்றார்கள் எனஅவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# இப்படியான மனிதர்களால் தான் உலகம் இன்னமும் இயங்குகிறது



(கொழும்பு)

தனது உயிரையும் பணயம் வைத்து கொரோனா நோயாளிகளை மருத்துவமனைகளில் சேர்க்கும் தென்னிலங்கை நபர் ஒருவர் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

கொழும்பின் புறநகர் பகுதியான பாணந்துறை பிரதேசத்தில் கொவிட் தொற்றுக்குள்ளான நோயாளர்களை இலவசமாக தனது ஜீப் வண்டியில் வைத்தியசாலைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்துச் சென்று ஒருவர் உதவி வருகிறார் என்று தெற்கு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளதுடன், பாராட்டுக்களையும் தெரிவித்து வருகின்றன.

60 வயதுடைய வர்த்தகரான சஹஸ்ரவிஜித்த என்ற நபரே கடந்த நான்கு நாட்களாக இந்த மனிதாபிமான செயலை செய்து வருகிறார்.

காலை இரவு பாராமல் கிடைக்கும் அனைத்து அழைப்புகளுக்கும் 24 மணித்தியாலங்களும் சேவை வழங்கும் நடவடிக்கையை அவர் மேற்கொண்டுள்ளார்.

கொவிட் பரவலின் போது அச்சத்தில் வீடுகளில் முடங்கியிருக்கும் மத்தியில் தனது உயிரை பணயம்வைத்து இந்த நபர் செய்யும்சேவையை சமூக வலைத்தளங்களில் பலரும் பாராட்டியுள்ளனர். (நி-5)

# கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தனிப்பட்ட தடுப்பூசி நிலையங்கள் வேண்டும்

## குடும்பநல சுகாதார சேவை சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்காக தனிப்பட்ட தடுப்பூசி நிலையங்கள் ஆரம்பிக்க வேண்டும் என குடும்பநல சுகாதார சேவை சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பொதுவான தடுப்பூசி செலுத்தப்படும் மையங்களுக்கு கர்ப்பிணித் தாய்மார்கள் செல்வதனால், அவர்களுக்கு வைரஸ் தொற்று ஏற்படக்கூடும் என்று அந்த சங்கத்தின் தலைவர் தேவிகா கொடித்துவக்கு தெரிவித்தார்.

தடுப்பூசி நிலையம் செல்லும் பொதுமக்கள் மத்தியில் டெல்டா திரிபு தொற்றுடையவர்கள் இருக்கக்கூடும் என்பதால் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்காக வாரத்திற்கு ஒரு முறை அல்லது சில மணித்தியாலங்கள் ஒதுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதற்காக, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலோ அல்லது பிரதேச வைத்தியசாலையிலோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## குழந்தையின் மனம்

ஒரு குழந்தை தொட்டிலிலே படுத்துக் கொண்டு அழுதுகொண்டு இருந்தது!

அவங்க அம்மா அடுப்பங்கரையிலே ஏதோ வேலையாக இருந்தார்கள்! அப்பா சும்மா இருந்தார். சரி நாம் ஏதாவது "டிரை" பண்ணிப்பார்ப்போமே! அழுகையை நிறுத்த முடியுமா என்று நினைத்து எழுந்து கிட்ட போனார்.

ஒரு தாலாட்டுப் பாடிப் பார்க்கலாம் என்று ஆரம்பித்தார். குழந்தை அதுவரைக்கும் மெதுவாக கத்துக் கொண்டிருந்தது. பலமாக கத்த ஆரம்பித்துவிட்டது.

குடுகுடு என்று ஓடி வந்து தன் இடத்திலே உட்கார்ந்து விட்டு மறுபடியும் பேப்பர் பார்க்க ஆரம்பித்து விட்டார். தாய் வந்து மறுபடியும் ஏதோ சொல்லி குழந்தையை சமாதானம் செய்ய வேண்டியதாக போய் விட்டது!

குழந்தையை அழவைக்கிறது என்றால் அது அப்பாவால் தான் முடியும்! அழுகின்ற குழந்தையை அமைதிப்படுத்துகின்றது என்றால் அது அம்மாவால் தான் முடியும்!

இப்படி பல அம்மாக்கள் சொல்வது உண்டு. வேறு வழி இல்லாமல் அப்பாக்களும் இதை ஒத்துக்கின்றது உண்டு. இதுவரைக்கும் சரி... இனிமேல் அவர்கள் அப்படி ஒத்துக்க வேண்டிய அவசியம் இல்லை!

ஏனென்றால் அவர்களாலேயும் குழந்தையோட அழுகையை நிறுத்தமுடியும்! அதற்கு ஒரு வழி உள்ளது. இப்போது சொல்லிக் கொடுத்து விடுகின்றேன்.

வேறு ஒன்றுமில்லை. உங்க வீட்டு குழந்தை அழ ஆரம்பிக்கின்றதா? உடனே ஒரு ரேப்ரிக்கார்டரை எடுத்துக் கொண்டு அதுக்கிட்டே போங்கள்! அது அழுவதை அப்படியே பதிவு செய்து வைத்துக் கொள்ளுங்கள்!

அந்த குழந்தை மறுபடியும் எப்போதாவது அழ ஆரம்பித்தால் இந்த டேப்பை உடனே அதற்குப் போட்டுக் காட்டுங்கள்! அது "கப்சிப்" என்று அழுகையை நிறுத்திவிடும்.

அதேமாதிரி ஒரு மருந்து போத்தலை குழந்தை தொடக்கூடாது என்று நினைத்தீர்கள் என்றால் அந்த போத்தல் மேல் ஒரு அழுகிற குழந்தை படத்தை ஒட்டி வையுங்கள்!

அதைப் பார்த்துவிட்டால் குழந்தைகள் அதை தொடுவதற்கு தயங்க ஆரம்பித்துவிடுமாம். அவுஸ்திரேலியாவிலே மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் சோதனை செய்து பார்த்து விட்டு இதை சொல்கிறார்கள்!

ஆகவே ஒரு குழந்தை அழுகின்ற சத்தத்தைக் கேட்டால் இன்னொரு குழந்தை அழுகையை நிறுத்தி விடுகிறது. ஒரு குழந்தை அழுகிற மாதிரி உள்ள படத்தை இன்னொரு குழந்தை தொடுவதற்கு யோசிக்கின்றது. இது தான் இன்றைக்குத் தகவல்.

ஒரு வீட்டிலே ஒரு குழந்தை அழுதுகொண்டே உட்கார்ந்திருந்தது. எதிரிலே அவர்கள் அப்பா உட்கார்ந்துகொண்டு ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். "என்ன சொல்லுகிறீர்கள் குழந்தையிடம்" என்றேன்.

"நீ அழுவதை நிறுத்தினால் தான் நான் ஒரு பாட்டு பாடுவேன் என்று சொல்லுகிறேன்" அப்படி என்றார்.

"நீங்க இப்படி சொல்வதனாலே தான் அந்தக் குழந்தை நிறுத்தாமல் அழுது கொண்டிருக்கு. எங்கே அழுகையை நிறுத்தினால் நீங்கள் பாட ஆரம்பித்துவிடுவீர்கள் என்ற பயம் அதற்கு! இப்படி எல்லாம் குழந்தையை பயமுறுத்தாதீர்கள்" என்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தல்கள்

11

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை பிரித்தானிய தனி நபர்கள் இதன் மூலம் இந்த நாட்டில் பெற்றுக் கொண்டார்கள். இவ்வாறு உருவாக்கப்பட்ட (முடிக்குரிய காணிகள்) காணிகளை முடிக்குரிய காணிகளாக இருப்பதால் பரவலாக்கம் செய்ய முடியாது என இலங்கை அரசாங்கம் கையை விரித்துள்ளது. ஆனால் இலங்கையின் இன்றைய அரசியல் அமைப்புச் சட்டத்தின் முதலாவது உறுப்புரை "இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் அதிஉயர் சட்டமாக அரசியல் அமைப்புச்சட்டம் விளங்கும்" என்று குறிப்பிடுகின்றது.

ஆகவே இந்த முடிக்குரிய காணிகள் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு அப்பாற் பட்டதாக இருக்க முடியாது. இது பற்றித் தீர்மானிக்கும் அதிகாரம் இலங்கைப் பாராளுமன்றத்திற்கு இருக்கின்றது. எனவே மாகாணத்தில் இருக்கக்கூடிய நிலங்களை மாகாண அரசாங்கத்தினது நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று இச் சபை கோரவேண்டுமென்ற பிரேரணையை நான்முன்மொழிகின்றேன்.

பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் இந்நாட்டு விவசாயிகளிடமிருந்து பறித்தெடுத்த நிலங்களையே "முடிக்குரிய காணி"களாகப் பிரகடனப்படுத்தியதுடன் பிரித்தானிய பிரஜைகளுக்கு விற்றார்கள். பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை பிரித்தானிய தனி நபர்கள் இதன் மூலம் இந்த நாட்டில் பெற்றுக் கொண்டார்கள். இவ்வாறு உருவாக்கப்பட்ட (முடிக்குரிய காணிகள்) காணிகளை முடிக்குரிய காணிகளாக இருப்பதால் பரவலாக்கம் செய்ய முடியாது என இலங்கை அரசாங்கம் கையை விரித்துள்ளது.

மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசன விடயங்கள் சம்பந்தமாக பின்வரும் பிரேரணையை முன்வைத்தார்.

### மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசனம்

மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசன விடயங்கள் இரண்டு மாகாணங்களுக்கிடையே பிரச்சினைகள் ஏற்படும்போது "தீர்க்கும் இல்மாக" மத்திய அரசு இருக்க வேண்டுமே தவிர வேறு தலையீடுகளாகவோ, அதிகாரங்களாகவோ இருக்கக்கூடாது என்று தீர்மானத்தை இந்தச் சபை எடுக்க வேண்டும்.

ஊவா மாகாண காணி அமைச்சர் "தங்கள் மாகாணத்திலிருந்து வடக்கு-கிழக்கு மாகாணத்தினூடாக ஓடுகின்ற நதியின் நீருக்கு வரி தரவேண்டும்" என்று ஒரு கடிதம் எழுதினார். அதற்குநான் "அப்படி வரி செலுத்த முடியாது. முடியுமானால் அத் தண்ணீரை எமது பகுதியால் ஓடாமல் தடுத்துக் கொள்ளுங்கள். இல்லையேல் எமது மாகாணத்தின் ஊடாக ஓடும் ஒவ்வொரு கலன் தண்ணீருக்கும் நீங்கள் வரிசெலுத்த வேண்டும். அத் தண்ணீர் எங்களுடைய நிலத்தைப் பாதிக்கிறது" என்று அந்தமாகாண அமைச்சரிடம் கூறினேன்.

இந்த நாட்டிலே மாகாண அரசாங்கம் உருவாக்கப்பட்டது பைத்தியக்கார மருத்துவமனைகளை உருவாக்குவதற்கல்ல. இந்த நாட்டில் ஓடிய இரத்த ஆற்றை நிறுத்தும் நோக்கத்தோடே உருவாக்கப்பட்டது. எனவே அந்த நோக்கம் நிரந்தரமானதாக இருக்க வேண்டும்.

ஊவா மாகாண காணி அமைச்சர் "தங்கள் மாகாணத்திலிருந்து வடக்கு-கிழக்கு மாகாணத்தினூடாக ஓடுகின்ற நதியின் நீருக்கு வரி தரவேணடும்" என்று ஒரு கடிதம் எழுதினார். அதற்குநான்"அப்படி வரி செலுத்த முடியாது. முடியுமானால் அத் தண்ணீரை எமது பகுதியால் ஓடாமல் தடுத்துக் கொள்ளுங்கள். இல்லையேல் எமது மாகாணத்தின் ஊடாக ஓடும் ஒவ்வொரு கலன் தண்ணீருக்கும் நீங்கள் வரிசெலுத்த வேண்டும். அத் தண்ணீர் எங்களுடைய நிலத்தைப் பாதிக்கிறது" என்று அந்தமாகாண அமைச்சரிடம் கூறினேன்.

"வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப் பெருமாள்.

முதலமைச்சர் நீர்விநியோகம் சம்பந்தமாகபின்வரும் பிரேரணையை முன்வைத்தார்.

### நீர்விநியோகம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலே நீர் விநியோகம், நீர்ப்பாசனம் என்று இரண்டு விடயங்கள் இல்லை. நீர் விநியோகம் என்ற தலைப்பின் கீழே நீர் விநியோகம், நீர்ப்பாசனம் என்ற இரண்டு அம்சங்களும் காணப்படுகின்றன. அவர்களுக்கு இது ஒரு பிரச்சினையாக இல்லை. அங்கு யாரையும் குடியேற்றி அணைத்து அழைப்பதற்கான முனைப்புகள் இல்லை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ளது போல நீர் விநியோகம் என்ற தலைப்பை போடாமல் கீழே உள்ள நீர்ப்பாசனத்தை மட்டும் போட்டிருக்கிறார்கள். நீர் விநியோகம் என்ற தலைப்பை விட்டுவிட்டபடியால் நீர் விநியோகம் யாருடைய பொறுப்பில் என்று கேட்டபோது "சட்டத்திலே விடுபட்டவை யெல்லாம் மத்திய அரசிற்குரியவை" என்கிறார்கள். எனவே இந்த விடயத்தில் தெளிவான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்று பிரேரிக்கிறேன்.

13ஆவது திருத்தச் சட்டத்தின் பின்னிணைப்பு இரண்டின் இரண்டாவது பிரிவாக மாகாணங்களுக்கு இடையிலான நீர்ப்பாசன, நில அபிவிருத்தித் திட்டங்கள் தொடர் பாக 2:2ஆம் பிரிவிலுள்ள "இச் செயற்றிட்டங்கள் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கும்" என்ற ஏற்பாடு "இச் செயற்றிட்டங்கள் மாகாண அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கும்" என்று மாற்றப்பட வேண்டும் என்றும் பிரேரிக்கிறேன்.

முதலமைச்சர் காடுகள் சம்பந்தமாக பின்வரும் பிரேரணையை முன்வைத்தார்.

### காடுகள்

"காடுகள்" என்ற அம்சத்திலிருந்து நிலத்தையோ, அபிவிருத்தியையோ பிரிக்கமுடியாது. கடந்த நாற்பது வருடகால வரலாற்றில் இனங்களுக்கிடையே ஐக்கியமின்மையும், முரண்பாடுகளையும், வளர்ப்பதற்கு நீர்ப்பாசனம், நிலம், காடுகள், மீன்பிடி என்ற நான்கு அம்சங் களையும் இலங்கை அரசு பயன் படுத்தி வந்திருக்கிறது.

இந்த நான்கு அம்சங்கள் தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போது கூடவே திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் ஏற்படுகின்றது. இதனால் தமிழ் பேசும் மக்கள் மத்திய அரசின் அபிவிருத்தித்திட்டங்களை சந்தேகக் கண் கொண்டு நோக்குவதுடன் வெறுப்படைய வேண்டிய நிலையிலும் இருக்கிறார்கள்.

எனவே வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள காடுகள் அனைத்தும் மாகாண அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்க மத்திய அரசினை இச் சபை கோர வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள காடுகள் அனைத்தும் மாகாண அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு மத்திய அரசினை இச் சபை கோர வேண்டும்.

முதலமைச்சர் கடற்றொழில் சம்பந்தமாக பின்வரும் பிரேரணையை முன்வைத்தார்.

### கடற்றொழில்

இந்திய அரசியலமைப்பு சட்டத்திலே "இந்தியாவின் ஆட்புல எல்லைக்கு அப்பாற்பட்ட கடற் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் மீன்பிடித் தொழிலைத் தவிர ஆள் புல எல்லைக்குட்பட்ட அனைத்து மீன்பிடிகளும் மாநில அரசாங்கங்களின் கட்டுப்பாட்டில் இருக்கும்" என்ற குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

அதை அடியொற்றி எமது பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திலே "ஆட்புல நீர்ப் பரப்பிற்கப்பால்" என்ற வாசகம் இடம்பெற்றிருந்த போதும் அவ்வாசகம் மாகாண சபைக்கான நிரலில் குறிப்பிடப்படாமையால் நடைமுறைச் சிக்கல்கள் மத்திய அரசாங்க அதிகாரிகளால் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்திலே மத்திய அரசின் (பாராளுமன்றத்தின்) அதிகாரங்கள் கொண்டுள்ள ஒதுக்கிய நிரலில் "ஆட்புல நீர்ப்பரப்பிற்கப்பால் மீன் பிடித்தலும், மீன்பிடித் தொழிலும்" மத்திய அரசிற்குரியது என்று குறிப்பிடப்படுகிறது.

மத்திய அரசாங்கமும், மாகாண அரசாங்கமும் தீர்மானிக்கக்கூடிய விடயங்களைக் கொண்ட "ஒருங்கிய நிரலில்" 19 ஆவது விட யமாக "கடற்றொழில் ஆட்புல நீர்ப் பரப்பிற்கப்பால் மீன்பிடித்தல் அல்லாதது" என்ற அம்சம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதன் மூலம் ஆட்புல நீர்ப்பரப்பிற்குட்பட்ட கடற்றொழிலை தீர்மானிக்கும் அதிகாரமும் மத்திய அரசிற்கே உரியதாகிறது.

இலங்கையைப் பொறுத்தவரை ஆட்புல எல்லைகளுக்கும், ஆட்புல எல்லைக்கப்பாலும் மேற்கொள்ளப் பட்டுவரும் கடற்றொழிலில் மீன்பிடிக் கூட்டுத்தாபனம், மீன் பிடித்துறைமுகக் கூட்டுத்தாபனம், மீன்பிடிக்கூட்டுறவு நிறுவனம் ஆகியனவே கணிசமான அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை உள்ளிட்ட 15 நாடுகளுக்கு

# ஹொங்கொங் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தது



(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இலங்கை உள்ளிட்ட 15 நாடுகளில் இருந்து வரும் பயணிகளுக்கு ஹொங்கொங் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

பங்களாதேஷ், கம்போடியா, பிரான்ஸ், கிரீஸ், ஈரான், மலேசியா, நெதர்லாந்து, ஸ்பெயின், இலங்கை, சுவிட்சர்லாந்து, தான்சானியா, தாய்லாந்து, துருக்கி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகிய நாகளுக்கே கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

புதிய தரவுகளின் படி, 15 நாடுகளில் இருந்து ஹொங்கொங்கில் நுழையும் பயணிகள் கொரோனா தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றிருந்தாலும், 21 நாட்கள் தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப் பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நாடுகள் அனைத்தும் "அதிக ஆபத்து" என்று கருதப்படுவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


மேலும், இந்த புதிய பயண ஆலோசனை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ( நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



### விரதங்கள்

## சந்தோச வாழ்வு தரும் திருவோணம்



திருவோணம் நோன்பு என்பது, திருவோண நட்சத்திரத்தோடு கூடிய நன்னாளில் நோற்கும் நோன்பாகும். இந்த விரதம் பெருமாளுக்கு உகந்தது.

இராசி மண்டலத்தில் 27 நட்சத்திரங்கள் உள்ளன. இதில் பெருமாளுக்குரிய திருவோணமும், சிவனுக்குரிய திருவாதிரையும் மட்டுமே "திரு" என்ற சிறப்பு அடைமொழியுடன் கூடியது.

தசாவதாரங்களில் வாமன அவதாரம் எடுத்த பெருமாள், மகாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் கேட்ட நிகழ்வு, திருவோண நட்சத்திரத்தன்று தான் நிகழ்ந்ததாக புராணங்கள் தெரிவிக்கின்றன.

மகாபலி சக்கரவர்த்திக்கு முக்திப் பேற்றினை வழங்கிய திருவோணத்தன்று, மக்கள் வாழ்வில் அனைத்து நலனும் பெற வேண்டி பெருமாளை நோக்கி விரதம் இருந்து வழிபடுகின்றனர்.

சந்தோஷ வாழ்வு அருளும் திருவோண விரதத்தை மலையாள மொழி பேசும் மக்கள் 'ஓணம் பண்டிகை' யாக கொண்டாடி மகிழ்கின்றனர்.

கேரள மக்களின் பாரம்பரிய விழாவான ஓணம் பண்டிகையை அனைத்து மக்களும் சாதி, சமய பாகுபாடின்றி கொண்டாடுவது தனிச்சிறப்பாகும். "காணம் விற்றேனும் ஓணம் கொண்டாடு" என்ற பழமொழி இந்தப் பண்டிகையின் பெருமையைப் பறைசாற்றுகிறது.

தமிழ் மாதமான ஆவணி மாதத்தை, கேரளாவில் 'சிங்க மாதம்' என்று அழைப்பர். அந்த மாதத்தை அவர்கள் ஆண்டின் தொடக்க மாதமாகவும் கருது கிறார்கள்.

அந்த மாதத்தில் வரும் திருவோண நட்சத்திரத்தன்று வளர்பிறையில் இந்தப் பண்டிகை வருகிறது. கிருஷ்ணர் நரகாசுரன் என்ற அசுரனை கொன்ற போது, அவன் தான் இறக்கும் தினத்தை மக்கள் கொண்டாட வேண்டும் என்று கேட்ட வரத்திற்கிணங்க தீபாவளி கொண்டாடப்படுகிறது. அதைப்போல் ஓணம் பண்டிகை தோன்றியதற்கும் ஒரு கதை உண்டு.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## சுகாதார விதிமுறை மீறல் 277 பேர் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் 277 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 54 ஆயிரத்து 889 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (நி-5)

## கிரிபத்கொட பிரதேசத்தில் 4 மாடிக் கட்டடத்தில் தீப் பரவல்

(கொழும்பு)

கிரிபத்கொட பிரதேசத்தில் 4 மாடிக் கட்டடம் ஒன்றில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. இந்த தீப்பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக மூன்று தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், கட்டத்திற்குள் இருந்த 4 சிறுவர்கள் உட்பட 12 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5)

## ஆறு ஏக்கர் கஞ்சாச் செடிகள் அதிரடிப்படையினரால் அழிப்பு

(கொழும்பு)

பொத்துவில் பொலிஸ் பிரிவில் விசேட அதிரடிப் படையினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பில் 6 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சா செடிகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இவ்வாறு மீட்கப்பட்ட கஞ்சா செடிகள் விசேட அதிரடிப்படையினரால் அழிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் சந்தேகநபரை கைது செய்வதற்காக பொத்துவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 170 | 160 |
| பச்சைமிளகாய் | 180 | 120 | 180 |
| தக்காளி | 100 | 140 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 |
| கோவா | 180 | 160 | 180 |
| கரட் | 160 | 160 | 180 |
| பூசணி | 100 | 50 | 120 |
| புடோல் | 100 | 100 | 80 |
| வாழைக்காய் | 80 | 70 | 70 |
| சின்ன வெங்காயம் | 160 | 150 | 240 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 250 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 50 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 140 | 160 | 160 |
| பயற்றங்காய் | 140 | 140 | 120 |
| லீக்ஸ் | 200 | 250 | 240 |
| பீற்றூட் | 120 | 100 | 100 |
| கறிமிளகாய் | 250 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 200 |
| போஞ்சி | 250 | 330 | 280 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 140 |
| கீரை – 1 பிடி | 60 | 50 | 60 |
| தேசிக்காய் | 120 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 60 |
| இராசவள்ளி | - | -- | 400 |
| வெங்காயப்பூ | 150 | 160 | 260 |
| முள்ளங்கி | 60 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 45 | 60 |
| வல்லாரை | 20 | 60 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | 140 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ராஜா நல்ல ராஜா!



உடனே அரசரிடம், "மன்னா இந்த எழிலான தோட்டத்தில் இப்படியொரு எளிய குடிசை இருப்பதன் காரணம் என்ன?" என்று கேட்டான்.

உடனே மன்னன், "மகிபாலா! இந்த குடிசை உன்னைப் போன்ற ஒரு தைரியசாலியின் குடிசை.

நான் எட்டு ஆண்டுகளுக்கு முன் இந்தத் தோட்டத்தை உருவாக்க முயன்றபோது ஒரு பெரிய பரப்பளவுடன் கூடிய இடம் எனக்கு மிகவும் அவசிய மாகியது.

நாடு முழுக்க அமைச்சர் அந்த மாதிரி ஒரு இடத்தைத் தேடிய போது இந்த இடம் அகப்பட்டது. ஆனால், பெரிய இடத்திற்கு நடுவே இந்த குடிசையும் இருந்தது.

"இதில் இருந்த ஏழைக் கிழவியிடம், நீ இந்தக் குடிசையை காலி செய்ய வேண்டும். இங்கு மன்னர் மிகப் பெரிய பூந்தோட்டம் அமைக்க இருக்கிறார்," என்று கூறிய போது கிழவி மறுத்திருக்கிறாள்.

விபரமறிந்த நான் நேரில் வந்து, "இடத்தை காலி செய்," என்று கூறினேன்.

ஆனால் அந்த பெண்ணோ, "மன்னா! இது என்பாட்டன் பூட்டன் காலத்து குடிசை. இதைத் தாங்கள் அழிப்பதை நான் விரும்பவில்லை. என் உயிரே போனாலும் இதனை இடிக்கவோ, ஓலைகளைப் பிரித்தெறியவோ நான் மனதார ஒப்புக் கொள்ள மாட்டேன். படைபலம் நிறைந்த நீங்கள் நினைத்தால் என்னை ஒரே நிமிடத்தில் கொன்று விடலாம்.

(தொடரும்)

# மகாபாரதம்




நற்கதிக்குச் செல்லவிருக்கும் நான் அக்கதியை அடையும் வழியை எடுத்துக் கூறும் வல்லமை பெற்றவனாக உள்ளேன்.

ஆயினும்..உம்மிடம் மண்டியிட்டுக் கேட்டுக் கொள்கிறேன்..இந்தத் தரும உபதேசங்களை நீரே "வேதம் உள்ள அளவும் உம் புகழ் மேன் மேலும் விரிவடைய வேண்டும்.

இந்தப் பூமி உள்ள காலம் வரை உம் புகழ் அழிவற்றதாக இருக்க வேண்டும். அதற்காகவே இவ்வுபதேசத்தை நீரே அருளுமாறு கூறினேன்.

நீர் தருமருக்குச் சொல்லப்போகும் உபதேச மொழிகள் வேதப் பொருளாக உறுதி பெறப் போகின்றன. உமது தெய்வீக உரையைக் கேட்கும் மக்கள் உயிர் துறந்த பின் புண்ணியங்களின் பயனை அடையப் போகின்றனர்.

கங்கை மைந்தரே! இவ்வாறு உம் புகழ் மிகப் பேசப்பட வேண்டும் என்பதற்காகவே உமக்கு மேலான ஞானத்தை அருளினேன். போரில் கொல்லப்படாமல் இருக்கும் அரசர்கள் யாவரும் பல தருமங்களையும் கேட்க விருப்பத்துடன் உம்மைச் சூழ்ந்து அமர்ந்திருக்கின்றனர்.

தர்மங்களை உம்மை விட அறிந்தவர் எவருமில்லை. உலகில் குறை இல்லாதவரைக் காண முடியாது. ஆனால்உமது பிறப்பு முதல் பாவம் என்பதை உம்மிடம் சிறிது கூடக் காணவில்லை.

குறையொன்றுமில்லாதவரே. ஒரு தந்தை மகற்கு உரைப்பது போல நீர் உபதேசம் புரிவீராக. தர்மம் தெரிந்தவர்கள் அதைத் தெரியாதவர்களுக்கு அதைத் தெரிவிக்க வேண்டும்.

அவ்வாறு உபதேசிக்காவிடின் பாவம் வந்து சேரும். ஆதலால் ஞானக்கடலே உமது உபதேசம் ஆரம்பமாகட்டும்" என்றார்.

அது கேட்டு பீஷ்மர் "கண்ணா உமது அருளால் நான் பெற்ற ஞான நல்லறத்தை தருமத்தை உமது தாள் பணிந்து இப்போது சொல்லத் தொடங்குகிறேன். (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*இறைவா! ஒவ்வொரு நாளும் நல்ல நம்பிக்கைகளுடன் இலக்கை அடைய உன் கருணையைத் தா!*
*– ரிக் வேதம்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆப்கானிஸ்தான் மக்களின் அவலம் கண்டு நெஞ்சம் பதறுகிறது

ஆப்கானிஸ்தானை தலிபான் படைகள் கைப்பற்றியதையடுத்து அந்த நாட்டு மக்கள் அங்கிருந்து வெளியேறிவிட வேண்டுமெனப் படும் பாட்டைப் பார்க்கும்போது நெஞ்சம் பதறுகிறது.

அந்தளவுக்கு ஆப்கானிஸ்தான் மக்கள் மரண பயத்தின் பிடியில் அகப்பட்டுத் தவிக்கின்றனர்.

ஆம், ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலை தலிபான் படைகள் கைப்பற்றியதையடுத்து காபூல் விமான நிலையத்தில் மக்கள் தஞ்சமடைந்து அங்கிருந்து ஏனைய நாடுகளுக்குத் தப்பிச் செல்லத் துடிக்கின்றனர்.

விமானத்தில் முண்டியடித்து ஏறுகின்ற அந்த பரிதாபத்துக்குள் இருக்கக்கூடிய மரண பயம் எத்துணை கொடூரமானதென்பதை இந்த உலகம் நிச்சயம் கண்டுகொள்ளும்.

அதிலும் பெருந்துயர், தங்கள் உயிரைப் பாதுகாப்பதற்காக விமானத்தில் தொங்கிக் கொண்டிருந்தவர்களில் இருவர் விமானம் உயரத்தில் பறந்தபோது கீழே விழுந்து இறந்து போனமையாகும்.

என்ன செய்வது உலக வல்லரசு நாடுகள் தத்தம் சுயநலனை மட்டும் கருத்தில் கொண்டு செயற்படுகின்றன.

தமது தேவைக்காக சில நாடுகளுக்குள் தமது நாட்டுப் படைகளை அனுப்புவது, பின்னர் தமக்குத் தேவையில்லை என்றவுடன் தமது படைகளை மீள வரவழைத்துக் கொள்வது என்ற வக்கிரத்தனத்தாலும் ஐ.நா சபை போன்ற உலகப் பொது அமைப்புகள் வலுவற்றவையாக இருப்பதன் காரணமாகவும் அப்பாவிப் பொதுமக்கள் இன்றுவரை வதைபட்டு வருகின்றனர்.

இந்த அவலத்தில் சிக்குண்டுள்ள ஆப்கானிஸ்தான் மக்கள் எங்ஙனம் தப்பிக் கொள்ளப் போகின்றார்கள் என்ற கேள்விக்கு எங்கும் விடையில்லை.

உண்மை, ஆப்கானிஸ்தான் மக்களின் அவலம் கண்டு ஈழத் தமிழ் மக்கள் வெளிப்படுத்தும் பிரதிபலிப்பு ஆத்மார்த்தமானது.

ஏனெனில் ஆப்கானிஸ்தான் மக்கள் படுகின்ற அவலத்தின் பல மடங்கை எம் தமிழ் மக்கள் வன்னிப் பெருநிலப்பரப்பில் சந்தித்தனர்.

அதிலும் இந்த நாட்டின் ஆட்சித் தரப்பு இனத்தின் பேரால் தமிழ் மக்களை வதைத்த கொடுமை சொல்லுந்தரமன்று.

எங்களைக் காப்பாற்றுங்கள் என்று கையேந்தி இரந்து கேட்ட தமிழ் மக்களை உதறித்தள்ளிவிட்டு, வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து சர்வதேச தொண்டு நிறுவனங்கள் வெளியேறியபோது, ஆருமற்றவர்களாக எம் மக்கள் பல்லாயிரக் கணக்கில் மடிந்து போயினர்.

அந்தத் துன்பத்தை – துயரத்தை அனுபவித்துக் கொண்டிக்கின்ற தமிழ் மக்களாகிய எமக்கு; ஆப்கானிஸ்தான் மக்கள் படும் அவலத்தை தாங்க முடியவில்லை.

இந்த அவலம் நீங்கி ஆப்கானிஸ்தான் மக்கள் பாதுகாப்பாக உயிர் வாழ்வதற்கு உலகம் உதவ வேண்டும் என்பதுதான் ஒரே கோரிக்கையாகும்.

## கரைச்சி பிரதேச செயலகத்தின் காணிக் கிளை முடக்கப்பட்டது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தின் காணிக் கிளை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் பாலசுந்திரம் ஜெயகரன் தெரிவித்துள்ளார்.

காணிக் கிளையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்தே குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

குறித்த நடவடிக்கை எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தொடரும் என்றும் ஏனைய ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்படும் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் எதிர்வரும் திங்கட்கிழமை மீளத் திறப்பது குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ம-3,100)

## சீனாவிடமிருந்து இலங்கைக்கு 61.5 பில்லியன் ரூபாய் கடன்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்திற்கும் சீன அபிவிருத்தி வங்கிக்கும் இடையே 61.5 பில்லியன் ரூபாய் பெறுமதியான கடன் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள சீன தூதரகம் குறித்த தகவலை வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைய, கொவிட்-19 ஒழிப்பு, நிதி ஸ்திரத்தன்மை, வாழ்வாதார அபிவிருத்தி என்பனவற்றுக்காக குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

10 வருட கால சலுகை அடிப்படையில் இந்த கடன் தொகை இலங்கைக்கு வழங்கப்படவுள்ளது. (ம-3)

## சாவகச்சேரி நகரில் 6 பேருக்கு தொற்று

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரப் பகுதியில் அமைந்துள்ள தனியார் வங்கி மற்றும் தனியார் நிறுவனம் ஆகியவற்றின் பணியாளர்களுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் ஆறு பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது.

இரு தனியார் நிறுவனங்களிலும் தலா மூன்று தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் வங்கி மற்றும் தனியார் நிறுவனம் ஆகியன முடக்கப்பட்டு, ஏனைய பணியாளர்கள் சுகாதாரப் பகுதியினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

(ம-3,30)

## எழுமாற்றுப் பரிசோதனையில்
## பாராளுமன்ற ஊழியர்கள் 12 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

பாராளுமன்ற ஊழியர்களிடத்தில் மேற்கொள்ளப்பட்ட எழுமாற்றுப் பரிசோதனையில் 12 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

275 ஊழியர்களிடம் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இத் தகவலை பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.

இதனை அடுத்து அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் ஊழியர்களும் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ். பிரதேசத்தில்** அறுகுவெளி, நாவற்குழி, கோகிலாக்கண்டிமங்களா பட்டறை, கோகிலாக்கண்டித்துறை, நாவற்குழிலிங்ஷ் ரெடிமிக்ஸ், மறவன்புலவு, மறவன்புல வு, கேரைதீவு வீதி, நாவற்குழி கேரைதீவு வீதி, தச்சன்தோப்பு கேரைதீவு வீதி, தனங்கிளப்பு ஆகிய பகுதிகளிலும்


**வவுனியா பிரதேசத்தில்** மகா றம்பைக்குளம், நெளுக்குளம் நீர்வழங்கல் சபை, அறவந்துலாவ-2, அறுகம்புல்வெளி, அறவந்துலாவ, நவகம்மானே, பாவற்குளம், பாரதிபுரம், கூமாங்குளம், கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், நாகரிலுப்பைக்குளம், நெளுக்குளம் கலைமகள் பாடசாலையடி, நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பழையனூர், பாண்சின்னகுளம், பாவற்குளம், பொன்னாவரசங்குளம், இராஜேந்திரகுளம், சாம்பல் தோட்டம் வீட்டுத்திட்டம், சூடுவெந்தபுலவு, தரணிக்குளம், ட்ராக்-07, விநாயகபுரம் வீட்டுத்திட்டம், ஆண்டியப் புளியங்குளம், துடாரிக்குளம், உளுக்குளம், உளுக்குளம் எல்.பி. குடியிருப்பு, தேக்கம் நானாட்டான் பிரதேச சபை, இசைமழைத் தாழ்வு, கட்டையடம்பன், கற்கடந்தகுளம், மடுவீதி சந்தி, மாயவராயர், கட்டையடம்பன், முருங்கன் விதை பண்ணை, மத்திய ஆயுர்வேத மருந்தகத்திற்கு அருகில், பூமலர்ந்தான், நீராவிபுரம், பண்ணைவெட்டுவான், பறயணாளங்குளம் சந்தி, பெரிய குஞ்சிக்குளம்- மாதக்கிராமம், பெரிய முறிப்பு, செட்டியார் கட்டையடம்பன், தொழில் நுட்பக்கல்லூரி- பண்ணைவெட்டுவான், தம்பனைக்குளம், தேக்கம் திட்டம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** சி.இ.சி.பி. (சிலாவத்துறை), சிலாவத்துறை கடற்படை முகாம், அகத்தி முறிப்பு, அகத்திமுறிப்பு திட்டம், அளவக்கை சிறுகுளம் திட்டம், அரிப்பு, அரிப்பு நீர்வழங்கல் சபை, ஹூனைஸ் நகர், கரடிக்குழி, காயக்குழி திட்டம், கொக்குப்படையான், கொண்டச்சி திட்டம், கொண்டச்சி நீர்வழங்கல் சபை, கொண்டச்சி சிங்கள கிராமம், கூழாங்குளம், கூழாங்குளம் திட்டம் (ஜீநாத் நகர்), மணற்குளம், மறிச்சுக்கட்டி, மருதமடு, மேதன்வெளி, முள்ளிக்குளம், முசலி தேசிய பாடசாலையடி, பெரிய பொள்ளாச்சி பொற்கேணி, பாலைக்குழி, பாலைக்குழி திட்டம். பெரிய பொள்ளாச்சிபொற்கேணி (பண்டாரவளை), பிச்சைவாணிபங்குளம் திட்டம், பொன்னாச்சிகுளம், புதுக்காமம் கிராமம், புதுக் குடியிருப்பு (சிலா வத்துறை), புதுவெளி, சின்ன பொள்ளாச்சி, பொற்கேணி திட்டம், சிலாவத்துறை, சின்ன பொள்ளாச்சி பொற்கேணி, தம்பட்ட முசலி, வெள்ளிமலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## தட்ப வெப்ப நிலைமைக்குரிய பாரம்பரிய ஆரோக்கிய மூலிகை உணவுகள்





டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**சென்ற வாரத் தொடர்ச்சி..**

**தூதுவளை இரசம்**

தூதுவளை இலை, கொழுந்து என்பவற்றை எடுத்து நீர்விட்டு, நாலில் ஒரு பங்காக வற்ற வைத்து, அந்த நீருக்கு வெந்தயம் , மிளகு, மஞ்சள், சீரகம், பழப்புளி, என்பன அளவாக சேர்த்தரைத்து, கரைத்து கொதிக்க வைத்து இறக்கி, வெங்காயம், கறிவேப்பிலை, கடுகு என்பவற்றை நல்லெண்ணெயில் தாளித்துக் கொட்டி, அந்த ரசத்தை பருகிவர நீர்க்கோவை, இருமல், சளி, உடற்சூடு என்பன நீங்கும். நன்கு பசி எடுக்கும்.

மலச்சிக்கல், மூலச்சூடு, கை, கால் எரிவு, அழல்வாதம், குடற்புண், மூலநோய் உள்ளவர்கட்கு,

**பிள்ளைக் கற்றாழைக் கறி**

பிள்ளைக்கற்றாழையின் உள்ளே உள்ள தசையை கற்றாழைச் சோறு என்பர். இதனைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி எடுத்துக் கொள்ளவும். இது மிகவும் கசப்புச் சுவையுடையதாக இருக்கும். எனவே இதனை 7,8 தடவை நீர்விட்டு நன்கு கழுவ வேண்டும். அவ் விதம் கழுவுவதால் இதன் கசப்புச் சுவை குறையும்.

அதன் பின்னர் கறிச் சரக்குகளுடன் இதையும் சேர்த்து அரைத்து உப்பும் புளியும் அளவாகச் சேர்த்து அடுப்பேற்றிக் கொதிக்க வைத்து இறக்கி, சோற்றுடன் சேர்த்து உண்ணலாம். (கற்றாழைக் கறிக்கு காரம் சேர்க்கக் கூடாது)

பிரண்டையில் அதிகமான கல்சியம் சத்து உண்டு. என்புகளுக்கு, என்பு முறிவுகளுக்கு சிறந்த மூலிகையாகும். (Calcium rich plant) மூலநோயை குணப் படுத்தும் தன்மையும் உண்டு. இதற்கு பிரண்டையை நெய்யுடன் சேர்த்து துவையல் செய்து கொடுக்கலாம்.

**பிரண்டைத் துவையல்**

பிரண்டைத் தண்டுகளை எடுத்து மருங்குகளில் இருக்கும் முட்கள் போன்ற அமைப்பை சீவி எடுக்கவும். சின்ன வெங்காயம்– 2 கைப்பிடி, கடுகு –1/2 தேக்கரண்டி, உளுந்தம் பருப்பு–2 மேசைக்கரண்டி, செத்தல் மிளகாய்–6, கறி வேப்பிலை–தேவையான அளவு பழப்புளி– தேசிக்காயளவு.

பிரண்டையை நறுக்கி வைக்கவும். நறுக்கு முன்பு கணுப் பகுதிகளையும் தோலையும் நீக்கிவிடவும். வெட்டும் போது கைகளிற்கு எண்ணெய் பூசிய பின்பு வெட்ட வேண்டும்.

வாணலியை அடுப் பேற்றி நல்லெண்ணெய் அளவாக விட்டு வகிர்ந்த பிரண்டைத் துண்டு களை போட்டு வதங்க விடவும்.


வதங்கிய பின்பு பிரண்டைத்துண்டுகளை எடுத்து விட்டு, வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு, உளுத்தம் பருப்பு, செத்தல் மிளகாய் சேர்த்து வதங்கவிட்டு, வெங்காயம், கறிவேப்பிலை தேவையான அளவு உப்பு சேர்த்து புளியும் சேர்த்து மிக்ஸியில் போட்டு அரைத்து எடுத்து தாளித்ததையும் சேர்த்துக் கொள்ளலாம்.


என்பு, மூட்டுக்கள் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு சிறந்ததாகும். பிரண்டையும் கல்சியம், இரும்புச்சத்து, உயிர்சத்து C அதிகளவில் காணப்படும்.

**உடலில் நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்க எள்ளுப்பொடி**

உமி நீக்கிய எள்ளு (விளக்கிய எள்ளு)–2 சுண்டு, செத்தல் மிளகாய்–10, பெருங்காயம்– சிறுதுண்டு, தூள் உப்பு– தேவையான அளவு.

எள்ளை தாச்சியிலிட்டு நன்கு வறுத்து எடுத்துக் கொள்ளவும். தாச்சியில் சிறிது நல்லெண்ணெய் விட்டு சூடானதும் மிளகாயைப்போட்டு முறுக வறுத்து எடுத்துக் கொள்ளவும். பின்னர் பெருங்காயத்தை சேர்த்து இடிக்கவும். அதன் பின்னர் எள்ளைப் போட்டு நன்கு இடிக்கவும். பின் தேவையான உப்புத் தூளை இட்டு இடித்து எடுத்து பத்திரப்படுத்தவும்.







தோசை, இட்லி, பிட்டு, சோறு முதலியவற்றுடன் இதைச் சேர்த்து நல்லெண்ணெய் அல்லது நெய்யும் சேர்த்துச் சாப்பிடலாம். எள்ளுப்பொடி 2,3 மாதங்களுக்கு மேல் கெடாமல் இருக்கக் கூடியது. கர்ப்பிணித் தாய்மாரும் ஏழு மாதங்களிலிருந்து பயன்படுத்தலாம்.

**கொள்ளுப்பொடி**

கொள்ளு–2 சுண்டு, செத்தல் மிளகாய்–10, உப்பு–தேவையான அளவு, மிளகு–1 தேக்கரண்டி, சீரகம்–1 தேக்கரண்டி.

கொள்ளை வாணொலியில் (தாச்சியில்) இட்டு சிவக்க வறுத்து இறக்கி கல்லுரல் அல்லது இரும்புரலில் இட்டு இலேசாக இடித்து கோது போக்கி எடுத்துக் கொள்ளவும். பின் இதை மாவாகத் திரித்துக் கொள்ளவும்.

தாச்சியில் சிறிது எண்ணெய் விட்டு சூடானதும் செத்தல் மிளகாய், மிளகு, சீரகம் என்பவற்றை வறுத்து எடுத்து இடித்து தூள் செய்து அதனுடன் மேற்படி கொள்ளும் பொடியும் கலந்து தேவையான உப்பு சேர்த்து இடித்து எடுத்து பத்திரப்படுத்தவும்.

தோசை, பிட்டு, இட்லி, சோறு என்பவற்றுடன் இப்பொடியைச் சேர்த்து சிறிது நல்லெண்ணெயும் விட்டுச் சாப்பிடலாம்.

கொள்ளில் மூளை வளர்ச்சிக்கும் உடல் வளர்ச்சிக்கும் அத்தியாவசியமான முக்கியமான அமினோ அமிலங்கள் (Essential amino acids) பல உள்ளன.

எனவே குழந்தை உணவில் கொள்ளையும் சேர்த்துக் கொள்வது மிகுந்த பயன் விளைவிக்கும்.

குழந்தைகளுக்கான பொரியரிசி மாவில் சிறிதளவு கொள்ளையும் சேர்த்துக் கொள்ளலாம். சுண்டல் கடலை அவித்துண்பது போல கொள்ளையும் அவித்து சாப்பிடலாம். அல்லது இரசத்தில் சேர்த்து கொள்ளு இரசம் தயாரித்து பயன்படுத்தலாம்.

கொள்ளை வறுத்து பருப்பு அரையல் போன்றும் செய்துண்ணலாம். கொள்ளைத் திரித்து மாவாக்கி கொள்ளுப் பொடியாக உணவில் சேர்த்துண்ணலாம்.





**சேம்பு மொட்டு வயல் நண்டு குழம்பு**

மழை காலங்களில் வயல் வரப்புகளில் வயல் நண்டுகளை சேகரிக்கலாம்.

சேம்புச் செடியில் மஞ்சள் நிறமாக உள்ள மொட்டுக்களை மட்டும் சேகரித்துக் கொள்ள வேண்டும்.

சேம்பு மொட்டுக்களை சிறிது சிறிதாக வெட்டி நீரில் அலசி எடுத்துக் கொள்ளவும். சேம்பு சமைக்கும் போது புளி சேர்த்துக்கொள்ள வேண் டும். எனவே முற்றிய புளியங்காய்களை நீரில் ஊற வைத்து பின்பு அடுப்பேற்றி வேக வைத்து இறக்கிக்கொள்ள வேண்டும்.

ஆறிய பின் கடைந்து புளித்தண்ணீரை வடித்தெடுத்துக் கொள்ள வேண்டும். இரண்டு மூன்று முறை நன்கு கடைந்து வடிகட்டி வைத்துக் கொள்ளவும். வெட்டிய சேம்பு மொட்டுக்களையும் அளவான நீர் ஊற்றி அடுப்பேற்றி வேக வைத்து எடுத்துக் கொள்ளவும். வெந்ததும் கடைந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு தாச்சியை அடுப்பேற்றி புளித்தண்ணீரை ஊற்றி மிளகாய்த்தூள், தக்காளி ஒன்று சேர்த்து கொதிக்க விடவும்.

சிறிது நல்லெண்ணெயில் வெங்காயம், உள்ளி, மிளகு போட்டு வதங்கியதும் சேம்பு மொட்டுக்கடையலையும் சேர்த்து புளித் தண்ணீர் தயார் பண்ணியதை ஊற்றி உப்பும் போட்டு வெந்து கொதித்து வரும்போது துப்புரவு செய்து கழுவிய வயல் நண்டையும் சேர்த்து கொதிப்பித்து இறக்கவும்.

இலகுவில் செரிமானம் அடையக்கூடியது. பசியைத் தூண்டக்கூடியது. வயிற்றிலுள்ள புழுக்களைக் கொல்லக் கூடியது. மலத்தை இளக்கி வெளியேற்றும். எமது தட்ப வெப்ப நிலைக்கு உகந்ததாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளம் குடும்பஸ்...

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12.30 மணியளவில் வல்வெட்டித்துறை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் வல்வெட்டித்துறைப் பகுதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான கிருஷாந்தன் (வயது-31) என்பவரே உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

குடும்பத் தகராறு காரணமாக கத்திக் குத்துக்கு இலக்காகிய குறித்த குடும்பஸ்தர் ஊறணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,18,33,60)

## 171 பேர் உயிரி...

உயர்வடைந்துள்ளது.

நாட்டில் ஒரே நாளில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தோரின் அதிகூடிய எண்ணிக்கை இதுவாகும்.

அத்துடன் நாட்டில் நேற்று 3 ஆயிரத்து 609 பேர் கோவிட்-19 தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3)

## பருத்தித்துறை...

முதியவரின் சடலம் நேற்று காலை கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது.

சடலமாக காணப்பட்டவர் இராஜகிராமம், கரவெட்டியைச் சேர்ந்த வைரவநாதரத்தினம் (வயது-78) என்பவர் எனத் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு உடற்கூற்று பரிசோதனை மற்றும் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டே இறுதி முடிவுகள் எடுக்கப்படும். (ம-3,18,33,60)

## வவுனியாவில்...

சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்ரிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று வெளியாகின.

அதில், 101 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,250)

## கிளிநொச்சி...

கப்பட்டுள்ளது.

குறித்த நடவடிக்கை இன்று முதல் நடைமுறைக்கு வரும் என்றும் பொருத்தமான பொது இடங்களில் வியாபார நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்றும் கரைச்சி பிரதேச சபை அறிவித்துள்ளது.

வியாபாரிகளும் மக்களும் சுகாதார நடைமுறைகளை உரிய வகையில் பின்பற்றி நடந்து கொள்ளுமாறும் பிரதேச சபை அறிவுறுத்தியுள்ளது. (ம-3,100)

## நாட்டை முடக்கு...

ரம்புக்வெல தெரிவித்தார்.

நேற்று சுகாதார அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

மாதாந்த சம்பளம் பெறுபவர்களுக்கு மேலதிகமாக, நாட்டில் தினசரி வருமானம் உள்ளவர்களும் உள்ளனர் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல சுட்டிக்காட்டினார்.

கடைகளை மூடுவதற்கும் சில நகரங்களை தனிமைப்படுத்துவதற்கும் மக்கள் எடுத்துள்ள முடிவு தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், மக்கள் தங்கள் விருப்பத்தின் அடிப்படையில் முடிவுகளை எடுக்க உரிமை உண்டு என்று கூறினார்.

புதிய சுகாதார அமைச்சராக அவர் நியமிக்கப்பட்டது குறித்தும் அமைச்சர் கருத்து தெரிவித்தார். (ம-3)

## கொரோனாத்...

முந்துள்ளனர்.

மேலும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் உயிரிழந்த 75 வயது வயோதிப் பெண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த இரண்டு பெண்கள் உட்பட மூவர் கோவிட் தொற்று நோயால் நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளனர்.

குறித்த மூவரும் சுகயீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அண்மையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அவர்களிற்கு முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனா தொற்று பீடித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

குறித்த மூவரும் 75 வயதிற்கு மேற்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. குறித்த பெண்களில் ஒருவர் சுதந்திரபுரம் பகுதியில் கொரோனா தொற்றிற்கிலக்காகி உயிரிழந்த முதியவரின் மனைவி என்பது குறிப்பிடத்தக்கது.

மன்னார் மூர் வீதியைச் சேர்ந்த 63 வயதான முதியவர் ஒருவர் கொரோனா தொற்று காரணமாக சிகிச்சை பலன் இன்றி மன்னார் பொது வைத்தியசாலையில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை மரணமடைந்துள்ளார். (ம-3,33,285,299)

## ஜனாதிபதி...

உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கும் இடையில் நேற்று விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றிருந்தது.

அதன்போது, கோவிட் தொற்றை ஒழிப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியினால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளை செயற்படுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பில் முன்னாள் பிரதமரினால் ஜனாதிபதிக்கு எடுத்துரைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடல் சுமார் 40 நிமிடங்கள் வரை நீடித்ததாக அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-3)

## நாடு முழுவதும்...

ஏற்கெனவே இரவுநேர ஊரடங்கு மற்றும் கடும் சுகாதார பாதுகாப்புச் செயற்பாடுகளை அரசு முன்னெடுத்துள்ளது.

அதன் அடுத்தகட்ட நகர்வாக நாட்டை முடக்குவதற்கு ஆலோசித்து வருகிறது. வார இறுதியில் இந்த முடக்கம் அமுலுக்கு வரலாமெனவும், இடைவேளை சகிதமான இந்த முடக்கம் சுமார் ஒரு மாத காலம் வரை நீடிக்குமெனவும் சுகாதாரத் துறையின் உயர்மட்ட வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பொதுமுடக்கம் கடுமையாக கடைப் பிடிக்கப்படும் அதேசமயம் அத்தியாவசிய சேவைகளை மட்டும் இயக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. பொது முடக்கம் குறித்தான அரசின் அறிவிப்பு விரைவில் வெளியிடப்படவுள்ளது என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## இரு...

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கொரோனா வைரஸ் தொற்று (கோவிட்-19) (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டமூலம் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

விசேட நிபுணர்களின் ஆலோசனைகளை பொருட்படுத்தாது தான்தோன்றித்தனமாக செயற்படுவதால் முழு நாடும் இன்று அபாய நிலையில் உள்ளது. இதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். ஆட்சியாளர்கள் இதயம் கொண்டவர்களாக செயற்பட வேண்டும்.

அன்று தான் கூறியதை கேலி செய்த அரசாங்கத்திற்கு இன்று அவை மரணங்களாக மாறியுள்ளதை சஜித் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த கஷ்ட காலத்தில் தங்களை அர்ப்பணித்துள்ள அரச ஊழியர்கள், சுகாதார அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு படையினரை விசேடமாக வாழ்த்துவதாகவும் அவர்களின் அர்ப்பணிப்புக்கு பெருமை சேர்க்கும் வகையில் அரசாங்கம் செயற்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

## 69 பேருக்கு...

தில் 69 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 132 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 610 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவற்றின் விபரம் வருமாறு,

யாழ்.மாவட்டத்தில் 69 பேர், மன்னார் மாவட்டத்தில் 20 பேர், கிளிநொச்சி மாவட்டத்தில் 24 பேர், வவுனியா மாவட்டத்தில் 17 பேர், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் 06 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

தன நிதானய
திகதி - 2021.08.17
சீட்டிழுப்பு இலக்கம் - 569
H 07 10 63 72
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 17.08.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2834
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
F 06 21 45 71
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/08/17
சீட்டிழுப்பு இலக்கம் 4539
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
B 4 9 8 6 2 8
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/08/17
சீட்டிழுப்பு இலக்கம் 1613
சுப்பர் இலக்கம் 12
வெற்றி இலக்கங்கள் 04 11 36 54

மெகா பவர்
திகதி 17/08/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0887
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
K 01 29 47 54 65

அத கோடிபதி
திகதி: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1342
சீட்டிழுப்பு திகதி: 17.08.2021
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 53,723,452
வெற்றி இலக்கங்கள்
20 39 50 66 R
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 3677
சீட்டிழுப்பு திகதி: 17.08.2021
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 33,784,465.50
வெற்றி இலக்கங்கள்
18 21 29 56 C
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜய ரசி
சுப்பர் ஜக்பொட்
2,330,042.40/=
திகதி : 17.08.2021
வெற்றி வாரம் : 3228
வர்ணம் :
வெற்றி இலக்கங்கள் கும்பம்
06 31 36 53
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
8,581,460/=

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1516
சீட்டிழுப்பு திகதி 17/08/2021
தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
A 04 17 36 60
அடுத்த சுப்பர் ஜக்பொட
63,876,533.20/=
அபிவிருத்தி லொத்தர் சபை

சீட்டிழுப்பு வாரம் 745
17.08.2021
செவ்வாய்க்கிழமை
B 05 24 33 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.
83,740,885
0112 333 547


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளவால்களுக்கும் ஆந்தைகளுக்குமே ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர்



(கொழும்பு)

நாட்டு மக்களை பாதுகாப்பதற்கு ஊடரங்கு சட்டத்தை பிறப்பிக்குமாறு வலியுறுத்தினால், அரசாங்கம் வெளவால்களுக்கும், ஆந்தைகளுக்கும் 6 மணித்தியாலங்கள் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளதாக அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குறுகிய காலத்தில் மக்களால் வெறுக்கப்பட்ட அரச தலைவராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ காணப்படுகிறார்.

இதுவரையில் எந்த அரச தலைவரையும் மக்கள் இந்தளவிற்கு வெறுக்கவில்லை.

வாழ்வா? சாவா? என்ற நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். இறப்பவர்கள் மயானத்திற்கு கூட நிம்மதியாக செல்லமுடியாத அவலநிலை இன்று ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்ததையிட்டு பெரும் வேதனையடைகிறேன்.

அரசாங்கம் மக்களை பாதுகாக்கும் என்று நம்ப முடியாது. எனவே மக்கள் இனி சுய பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார். (ம-03)


**English Classes**
Gr. 1 to O/L (Personal)
zoom மூலம் அல்லது
வீடு வந்து கற்பிக்கப்படும். (7682)
077 331 4608

**காணி விற்பனைக்கு**
மீசாலை A9 வீதி, புத்தூர் றோட்
தட்டான் குளப்பிள்ளையார் ஆலய
பின்வீதியை அண்டிய இடத்தில்
காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு (C-2552)
077 610 4861

**விரைவு பொதிகள் சேவை**
V2 TRAVELS
UK-975 /=Kg
எமது நேரடிக்கிளைகள்
• யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
• நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
• புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
• பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி
0768226240 DHL (C-2438)

**உடனடி வேலை வாய்ப்பு**
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS (C-2557)
எமது கிளைகள்
கிளிநொச்சி சுன்னாகம்
சாவகச்சேரி மானிப்பாய்
நெல்லியடி பருத்தித்துறை
திருகோணமலை வல்வெட்டித்துறை
கோப்பாய் புத்தூர்
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15'000/-
பயிற்சியின்போது - 10'000/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com

**UK-STUDENT VISA**
லண்டன்
A/L எடுத்த மாணவர்கள் மற்றும் DIPLOMA/DEGREE முடித்த மாணவர்கள் குறைந்த செலவில் இங்கிலாந்தில் கல்வி கற்க இலவச ஆலோசனைகள்/அனுமதிகள் மற்றும் விசா ஏற்பாடுகள். (C-2556)
ENGLISH MEDIUM ல் கல்வி கற்றவர்களுக்கு IELTS தேவையில்லை
WHY UK IS A POPULAR STUDY DESTINATION?
IELTS இலவசமாக கற்பிக்கப்படும் (நிபந்தனைக்குட்பட்டது)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# நல்லூர் ஆலய சூழலிலுள்ள கடைகளுக்கு வீதித்தடை ஊடாக பயணிக்க நேர ஒழுங்கில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயத்தை சூழவுள்ள வீதி தடைகளுக்குள் உள்ள கடைகளுக்கு செல்வதற்கு பொது மக்களை அனுமதிப்பதற்கான நேர ஒழுங்கொன்றினை யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் அறிவித்துள்ளார். அதன்படி,

ஆலயத்தின் விசேட பூஜை நேரமான அதிகாலை 4 மணி தொடக்கம் அதிகாலை 5 மணி வரையிலும் காலை 10 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரையிலும் மாலை 04 மணி முதல் இரவு 06 மணி வரையிலும் வீதித்தடைகள் ஊடாக உட்செல்ல அனுமதியில்லை.

அதேநேரம் விசேட திருவிழா நாட்களில் முழுநாளும் வீதித்தடை ஊடாக உட்செல்ல அனுமதி இல்லை. ஏனைய நேரங்களில் பொதுமக்கள் உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தங்கள் தேவைகளுக்காக வீதித்தடைகள் ஊடாக பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

அதேவேளை சுகாதார நிலைமைகளின் அடிப்படையில், தேவையேற்படின் இந்த நடைமுறைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் என முதல்வர் அறிவித்துள்ளார். (ம-03,18,33)

# குடும்பஸ்தர் மீது கத்திவெட்டுத் தாக்குதல்

## ஈவினை மத்தியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கத்திவெட்டுக்கிலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் ஈவினை மத்திப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றுள்ளது. இதில் அதே பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான இ. பத்மகாந்தன் (வயது - 42 ) என்ற குடும்பஸ்தர் தலைப் பகுதியில் வெட்டுக் காயங்களுக்குள்ளான நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

குறித்த கத்திவெட்டுத் தாக்குதலானது உறவினர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்டதாக கத்திவெட்டுக்கிலக்காகிய குடும்பஸ்தரால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-03)


**வெளிவந்துவிட்டது!**
இவ்வாண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின்
துரித தயார்படுத்தலுக்காக முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களுடன் வெளிவந்துவிட்டது!
வெற்றித்தேர்வு விசேட மாதிரி வினாப்பத்திரத் தொகுப்பு
நாடெங்கிலும் உள்ள பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். (C-2558)
தேவையான பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள், புத்தகசாலைகள் எம்முடன் தொடர்புகொண்டு விசேட விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ள முடியும்.
தபால் மூலம் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு :- 0775388471, 0773126807, 0212229016 | வெற்றித்தேர்வு வெற்றியாளர்களின் தெரிவு

**CHEMISTRY**
zoom
அகில இலங்கை ரீதியான
அதிதுரித மீட்டல் கருத்தரங்கு
Ka Subeesan
InOrganic
5 DAYS 20-30HRS
250 MCQ + PART II
Fees 1500 + 200
கையேடுகள் உங்கள் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
August 20ற்கு முன்னர் கட்டணங்களைச் செலுத்தி அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும்.
மாணவர் நிலை எதுவாயினும் ஒரே நாளில் மனநிலையில்
மாற்றம் ஏற்படும் CHEMISTRY சுகம். (7660)
SCIENCE Ocean
தொடர்புகளுக்கு : 076 236 3470 / 077 430 7829
telegram @Science Ocean


# தடுப்பூசிகளால் மாத்திரம் கொரோனா பரவலை கட்டுப்படுத்த முடியாது

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண

(கொழும்பு)

தடுப்பூசிகளின் மூலம் மாத்திரம் நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்திவிட முடியாது. மக்கள் சுகாதார ஒழுங்குவிதிகளை முறையாகப் பின்பற்றுவதையும் உறுதிப்படுத்த வேண்டும்." - இவ்வாறு ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கொரோனா வைரஸ் தொற்று தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-"ஆபத்தான கொரோனா வைரஸின் திரிபான டெல்டா நாட்டில் தீவிரமாகப் பரவி வருகின்றது. இந்த விடயத்தில் நாங்கள் ஒருவருக்கொருவர் குறை கூறிக்கொண்டு செல்லாது, அனைவரும் ஒன்றிணைந்து ஒற்றுமையாக இந்தப் பிரச்சினையில் செயற்பட வேண்டும்.

இந்த வைரஸ் எமது நாட்டில் வேகமாகப் பரவி வருகின்றது. டெல்டா என்ற திரிபு உருவான பின்னர் இது வேகமாகப் பரவி வருகின்றது. இதை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பது தொடர்பாக நாங்கள் சிந்திக்க வேண்டும்.

அனைத்து வகையான தடுப்பூசிகளிலும் ஒரு டோஸ் வழங்குவது போதுமானது அல்ல. குறைந்தது இரண்டு டோஸ்களை வழங்க வேண்டும். எனினும், தடுப்பூசியால் மட்டும் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாது. இதனால் எமது நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியது அவசியம்.இதேவேளை, இந்த விடயத்தில் பாராளுமன்றத்தில் அரசியல் கட்சிகளில் குழுவை அமைத்து அந்தக் குழுவின் மூலம் சுகாதார அமைச்சருடன் தொடர்பை ஏற்படுத்தி நாட்டில் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும்" - என்றார். (ம-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.